# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர்: 13 | பிலவ ௵ ஐப்பசி ௴ | வருட சந்தா |
| இதழ்: 7 | அக்டோபர்–நவம்பர் '61 | ரூ. 3-00 |




சுந்தரர் பசிதவிர்க்க, இறைவன் பிட்சை எடுத்தல். (விளக்கம்—பக்கம் 294)

## உள்பொருள்

பக்கம்

1. கருத்திலொளிரும் குருத்து (திருப்புகழ்மணி) ... 289
2. சோறு அளித்த கருணை (கி. வா. ஜ.) ... 294
3. குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) ... 298
4. 'ஒருவரையு மொருவரறி' திருவேரகம் திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 301
5. அருளும் ஆண்மையும் (கி. வா. ஜகந்நாதன்) ... 311
6. "கடவுள்" சச்சிதாநந்தன் (சாம்பசிவ சர்மா) ... 315
7. தாம்தாம் செய்தவினை (ரஸபதி) ... 321
8. இறைபணி புரிதல், அறநெறி நிற்றல் (ஆ. கி. ரங்கராஜன்) ... 332
9. SRI RAMAYANA & SRI SKANDA-PURANA (*Thiruppugal Mani*) ... 335

### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 விதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

| | | |
|---|---|---|
| மலர் 13 | பிலவ ௵ ஐப்பசி ௴<br>அக்டோபர்-நவம்பர்—1961 | இதழ் 7 |


## கருத்திலொளிரும் குருத்து

(திருப்புகழ் மணி)

உலகங்களை யெல்லாம் படைத்து ஆளும் அரசனாகிய ஆண்டவனிருக்கு மிடத்திற்குக் கோயில் என்றுபெயர். ஆனால், கோயில் என்ற உடன் கல்லும் சுண்ணாம்பும் கலந்து கட்டப்பட்ட ஒரு கட்டிடந்தான் நம் கண்முன் தோன்றும். அதுமட்டுந் தான் அவன் கோயிலா? இல்லை; உலக முழுவதும் அவன் கோயில்தான். ஒவ்வொரு ஜீவராசிகளும் உடம்பும் அவன் தனக்கென்று அமைத்துக் கொண்ட தனிக் கோயிலாகும்.

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டி
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"

என்றார் அப்பர்.

---

காய்வீழ் மாமரத்தில் கல்லெறிவார்போல், சில்லோர்
வாய்த்த செல்வத்தாரை வருத்துவதும் கண்டாமே.

பஞ்ச பூதங்களால் கட்டப்பட்ட உடம்புகள் தான், இறைவனுடைய இயற்கைக் கோயில்கள் என்பதை யுணர்த்துவதற்காகப் பெரியோர்களால் அமைக்கப்பட்டவைதான, கல்லும் சுண்ணும்பும் சேர்த்துக் கட்டப்பட்ட கோயில்கள். நடமாடும் கோயிலாகிய மனிதனின் இதயத்தி லொளிரும் இறைவனைத் தான், கோயிலில் கருவறையி லிருக்கும சிலையுரு காட்டுகிறது. தேகத்தையே கோயிலாககுவது தான் சமாதி. இந்தச் சமாதியைச் சந்தத்தினல் கட்ட வேண்டும்.

" சிநதையில் வைத்துச சிராதியி லேவைத்து
முந்தையில் வைத்துத்தம் மூலத்தி லேவைத்து
நிந்தையில வையா நினைவதி லேவைத்து
சநதையில் வைததுச சமாதி செய்வீரே "

என்ருர் திருமூலர்.

சந்தம் என்பது பண் அல்லது இராகம். ஆண்டவனுடைய துதிகளாகிய திருப்புகழ் நாம சங்கீர்த்தனம், இவைகளின் மேற்பட்ட சந்தங்களைக் கொண்டு தான் சமாதி கட்டிக்கொளள வேண்டும். இத்தகைய சமாதிகட்டிக் கொண்டவர்கள் தான் அருணகிரியாரும், ஆழ்வாராதிகளும, நாயன்மார்களும். இராமநாமத்தால் தனக்குச சமாதி கட்டிக் கொண்டவர் ஆஞ்சனேயர். இந்தச் சமாதிகள் உடமபுக ளழிந்தாலும அழியாதவை. அந்தச் சமாதி வேறல்ல, ஆண்டவன் வேறல்ல அப்படிச் சமாதி கட்டிக் கொண்டவர்கள், முகதிக்கு அதீதமான பேரின்ப நிலையி லிருப்பவர்கள், எப்பொழுதும் பாடிக் கொண்டும் பஜனை செய்து கொண்டும் ஆனந்தமாயிருப்பார்.

---

மாடடிற்குச் சூடு மறையாமை போல், நலலோர்
சேட்டைசெயின், அக்குற்றம் என்றும் தெரியுமரோ

"" கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர் ''

என்ற பாட்டில், அத்தகையோரின் மனநிலையைச் சேக்கிழார் விளக்கி யுள்ளார்.

ஆண்டவனுடைய நாமங்களே சப்தப்ரம்மம். இதை மந்திரங்களென்றும் சொல்லலாம். ஆனல், மந்திரங்களை விட நாமங்கள் மேலானவை. மந்திரங்கள் வேதங்களில் சொல்லிய முறைப்படி கருமாக்களைச் செய்பவருக்குத்தான் பயன்படும். நாமங்களை யார் எப்படிச் சொன்னலும் பயன் தரும். இந்த நாமங்கள சிந்தையிலுள்ள அசுத்தங்களை யெறிந்து பொன்னம்பல மாகக் விடுகின்றன. அந்தப் பொன்னில் சிந்தை அலலது நினைவெனும் இரத்தினத்தைப் பொருத்தி சிம்மாஸனம் அமைக்கவேண்டும். இந்த சிங்காதனத்தில் சுத்த அசுத்தங்களுக்கு அதீதமான ஆண்டவன் வந்து அமர்ந்து விடுவான்.

சுத்தமென்பது ஆண்டவன் நினைவால்தான் உண்டாகும். மற்ற உலக விஷயங்களைப் பற்றிய எண்ணங்கள் அசுத்தத்தைத்தான உண்டாக்கும். சிந்தையைப் பொன்னம்பலமாகக் ஆண்டவனை வரவழைத்து அதில் ஆடும்படிச் செய்வதுதான் தொண்டர்களின் கடமை. வெகு சிரமப்பட்டு இந்த ஊன் பிண்டத்தைப் பெற்று வளர்க்கிருள் அன்னை. ஆனல், கருத்தில ஒருஜோதிப் பிள்ளையை வைத்து ஆளுவதே மனிதன கடமை. அந்தப் பிள்ளையைப் பெறுவதல்ல. பற்றிப் பிடிக்க வேண்டும். பெறுறபின்

---

செல்வத்தை யீதல், அனுபவித்தல் செய்யாதார்,
பொல்லாத துனபம் புசிப்பர்; இது நிசசுயமே

ளையை ஆதரிப்பதை விடப் பெருதபிள்ளையாகிய முருகனை உள்ளத்தில் பிடித்து இருத்தி ஆதரிப்பது மிக மிகச் சிறந்தது. கண்ணனுடைய உருவத்தை மனத்தில் வைத்து ஆதரித்தனர் கோபிகைகள். அவர் கருத்தில் கருப்பமா யிருககத் தெரிந்து கொண்டனர். அவர்களுள்ளத்தை விட்டு அகலாமல் நிலைத்திருந்தான் கண்ணன்.

உத்தவர் அவர்களுக்கு உபதேசம் செய்ய வந்தபொழுது, கண்ணன் எங்குச் சென்றான். எங்களுள்ளத்தை விட்டுப்போகட்டும் பார்க்கலாம் என்றனராம்.

கருத்தென்பது நமது அறிவி லிருக்கப்பட்ட ஒருகரு. அக்கருத்தினுள் ஒரு குருத்தா யிருக்கிறான் முருகன். சிவன கருத்தில் சிவயோகமெனும் குருத்து தோன்றியதாம். அககுருத்தே முருகனைக் காணப் பட்டதாம். ஐந்து பூதங்களையும், சமயங்களையும், எல்லாக் கலைகளையும், மும்மூர்த்திகளையும், அவர்களால் படைக்கப்பட்ட அண்டங்களையும், சூரிய சந்திரர் முதலிய தத்துவங்களையும் சேர்த்துத் தன் சொருபமாக உணர்வதே சிவயோகம். அந்த யோகத்தையும் அதற்கு மேற்பட்ட நிலையையும் கருத்தினுல் பெறுகிறார்கள் தொண்டர்கள்.

மனிதனுக்கு இடதுகை வலதுகை என்று இரண்டு கைகளிருந்தாலும், ஆண்டவனைத் துதிக்கும் பொழுது அவையிரண்டும் ஒன்றுபடுகிறது. இடது கையை விலக்கி வலதுகைமட்டும் கொண்டுவந்தால் கும்பிட முடியுமா? இடதுகை மண்; வலதுகை விண்.

---

நல்லார் இல்லாச சபையில, நாணமின்றி வாழ்பவர்கள்
நல்லார் சபையில், நாவிழந்து மாழ்குவரே.

இவை இரண்டும் சேர்ந்த இடம் இறைவனிருக்குமிடம்; தொண்டர்கள் கூடுமிடம்.

நான் என்ற ஆணவத்தையும், ஆசையையும் ஆண்டவனுக்குக் கொடுத்து, வெறுங்கையைக் கூப்ப வேண்டும். ஒரு ஜாலர் மண்ணைக் குறிக்கிறது. மற்றொரு ஜாலர் விண்ணைக் குறிக்கிறது. இரண்டு ஜாலரும் சேர்ந்த இடத்திலிருந்து ஓங்காரநாதம் பிறக்கிறது. மண்ணும் விண்ணும், சிவனும் சக்தியும், மனமும், ஆண்டவனும் சேர்ந்த இடமே மானிட வுள்ளம். அங்கிருந்து பிறப்பதே ஆனந்தம், மோக்ஷம். எங்கும் நிறைந்த இறைவனுக்கு கைகூப்புவதன்றி வேறென்ன செய்ய முடியும்? இடது கையும் வலது கையும், உலகம் நானென்றும் நீயென்று பேதித்திருப்பதைக் காட்டுகிறது. இந்த இரண்டும் சேருமிடமே நானற்ற இடம். நானற்றால், நீயுமில்லை. இருப்பது எங்கும் நிறைந்த தானாகிய பூரணந்தான். "யானாகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நிலை நின்றது தற்பரமே" என்றார் அருணகிரியார். இந்த நிலையில் நிற்பதற்கு முருகனுடைய சரணத் தியானமே வழி.

சுபம்.

---

ஞானிகளைக் கூசாமல் ஏசி, ஞயமறியார்,
ஆனைமேல் மோதும், முடவர்போல் ஆவாரே.

**சுந்தரர் வரலாறு :**

## சோறு அளித்த கருணை

(கி. வா. ஜ.)

சுந்தரமூர்த்தி நாயனர் திருவாரூரில் இருந்தபடியே சுற்றிலுள்ள பலதலங்களுக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டு வந்தார். திருநள்ளாறு, திருக்கடவூர் வீரட்டம், திருக்கடவூர் மயானம், திருவலம்புரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருநனிபள்ளி, திருசெம்பொன்பள்ளி, திருநின்றியூர் ஆகிய தலங்களுக்குச் சென்று தரிசித்தார். திருநினறியூரிலிருந்து புறப்பட்டுச சீகாழியை நோக்கிச் செல்பவர், இடையிலுள்ள நீடூரைப் பணியாமல் போனுர். இடையிலே அப்பதியின் நினைவு எழவே, மீண்டு அத்தலததை நாடிச் சென்றுர். இறைவனைப் பணிந்து, "நீடூரில் எழுந்தருளி யிருக்கும் பரமனைப் பணியாமல் விடலாமா?" எனறவினு, ஒவ்வொரு பாடலிலும் அமைநத திருப்பதிகத்தைப் பாடிஞர். அதன் முதற்பாசுரம் வருமாறு.

"ஊர்வ தோர்விடை ஒன்றுடை யானை
ஒன்னு தல்தவிக் கன்னுத லானைக்
கார தார்கறை மாமிடற் ருனைக்
கருத லார்புரம் முன்றெரித் தானை
நீரில் வாளை வரால்குதி கொள்ளும்
நிறைபு னற்கழ னிச்செல்வம் நீடூர்ப்
பாரு ளார்பர வித்தொழ நின்ற
பரம னைப்பணி யாவிட லாமே!

திருநீடூரினின்றும் புறப்பட்டுச் சில தலஙகளைப் பணிந்து, சீகாழியை வலமாக வந்து இறைஞ்சித திருக்குருகாவூர் என்னும் பதியை அடையச் சென்றுர். அப்போது அவருக்குப் பசியும் தாகமும் மிகுதியாக இருநதன. அதனை உணர்ந்த

---

சிறையிடுவர் யானையை, யானையிஞல்; சீர்த்தி
அறிவால் அறிவை, வசம்செய்வர் ஆண்மையரே.

இறைவன் அவர் வரும் வழியில் தண்ணீரும் பொதிசோறும் கொண்டுசென்றான. ஒருபால் குளிர்ந்த பந்தலை அமைத்து, ஒரு வேதியரைப் போன்ற திருக்கோலத்தை மேற்கொண்டு அங்கே தங்கியிருந்தான.

திருக்குருகாவூர் இறைவன் இவ்வாறு சுந்தரர் வரவு பார்த்து இருக்க, தம்பிரான் தோழர் பல தொண்டர்களுடன் அவ்வழியே வந்தவர், அந்தப் பந்தருக்குள் நுழைந்து ஆர்வத்துடன் அங்கிருந்த வேதியருடன் பேசினார். அப்போது வேதியராக வந்திருந்த இறைவன், "நீங்கள் மிகவும் பசி தீரும்படி, நான் கொண்டு வந்திருக்கும் கட்டமுதைத் தருகிறேன. காலம் தாழ்த்தாமல் அதை உண்டு, குளிர்ந்த தண்ணீரையும் குடித்து இளைப்பாறுங்கள்" என்றான்.

அது கேட்ட சுந்தரர் அதற்கு இசைந்து, பெருமான தந்த கட்டமுதைப் பெற்று உடன் வந்த தொண்டருடன் இருந்து பசியாற உண்டார். அவருடன் வந்த பல தொண்டர்களும் உண்டு. அதன மேலும் அங்கே பசியுடன் வந்தவர்களும் உண்ணும் அளவுக்கு அந்தக் கட்டுச சோறு நிரம்ப இருந்தது. உணவு கொண்டு இனிய தண்ணீரையும் பருகிய சுந்தரர், அயர்ச்சியினால் அந்தப் பந்தலிலேயே துயிலலானார். அருகிலிருந்த யாவரும் துயில் கொண்டார்கள். அப்போது சிவபெருமான் தான் உண்டாக்கும் பந்தலோடு தானும் மறைந்தருளினான்.

துயினற நாவலூரர் எழுந்து பார்க்கும்போது தண்ணீர்ப் பந்தலையும் காணவில்லை. வேதியரையும் காணவில்லை. இறைவன்தான இவ்வாறு செய்தான் என்று உணர்ந்து விம்மிதமுற்று,

"இத்தனையாம் ஆற்றை அறிந்திலேன் எம்பெருமான்
பித்தரே என்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்

---

வண்டினம், பூவை வருத்தாமல் தேனுணல்போல்,
கண்டுபோல் நன்மொழியர், காசினியில் வாழ்வாரே.

முத்தினை மணிதன்னை மாணிக்கம் முளைத்தெழுந்த
வித்தனை குருகாவூர் வெள்ளடை நீயன்றே.''

எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப பாடினார். பாடிய படியே திருக்குருகாவூர் சென்று திருக்கோயிலை அடைந்து சிவபெருமானைப் பணிந்து இன்புற்றார். அங்கே சிலநாள் தங்கிப் பிறகுத் திருக்கழிப்பாலையைத் தரிசித்துக் கொண்டு தில்லையை அடைந்தார்.

அங்கே திருவீதியைப் பணிந்து புகுந்து, மன்றுள் எடுத்த சேவடியை இறைஞ்சிச் சிலநாள் அங்கே தங்கினார். அப்பால் திருததினைநகர் சென்று இறைவனை வணங்கித் திருநாவலூரை அடைந்தார்.

சுந்தரர் வருகையை அறிந்து அவ்வூரினர் ஊரை அலங்கரித்து எதிர் கொண்டுவந்து அழைத்துச் சென்றனர். நாயனார் திருக்கோயிலுக்குள் சென்று பரமனை வணங்கிப் பதிகம் பாடினார்; அங்கே சிலநாள் தங்கி இறைவன்பால் அருள் பெற்றுத் தொண்டைநாட்டுத் திருப்பதிகளைத் தொழும் ஆர்வம் உடையவராகிப் புறப்பட்டார்.

இடையிலுள்ள பல இடங்களைக் கடந்து திருக்கழுக்குன்றை எய்தி, இறைவனை வணங்கித் திருபபதிகம் பாடினார். அங்கிருந்து திருக்கச்சூர் எனனும் தலத்தை அணைந்தார். அங்குள்ள கோயிலுக்கு ஆலக்கோயில் எனறு பெயர். அத் திருக்கோயிலுக்குள் சென்று சிவபெருமானை வணங்கிப் புறத்தே வந்தார். அப்போது உணவு கொளவதற்குரிய சமயமாக இருநதது. சுநதரருடன் அமுது சமைபபதறகாக வரும் பரிசனஙகள் இனனும் வநது சேரவில்லை. ஆகையால பசியினால் வருந்திய அவர் கோயிலின மதிற்புறத்தே அமர்ந்திருந்தார்.

அவர் பசித்திருப்பதைப் பொறுத இறைவன் ஓர் அந்தணக் கோலம் கொண்டு, கையில் ஒரு வெற்றோட்டை

---

வருந்தாத வாழ்க்கை, திருந்தவழி யில்லை;
விருந்தினரைத் தாங்கும் விழாஎன்றும் நல்லதுவே.

ஏந்தியபடி வந்தான். சுந்தரரை அவர் அணுகி நோக்கி, "நீர் பசியினால் மிகவும் சோர்வுற்றிருக்கிறீர். நான் இப்போது இவ்வூரில் அன்னப்பிட்சை எடுத்துவந்து உமக்கு அளிக்கிறேன். வேறு எங்கும் போகாமல் சிறிது நேரம் இங்கே இரும்" என்று சொல்லிப் பிட்சை வாங்கப் புறப்பட்டான். வீதியிலுள்ள வீடுதோறும் சென்று பிட்சை வாங்கிக் கொண்டு வந்து சுந்தரருக்கு வழங்கினன். வந்த மறைய வரைத் தொழுது, அவர் தந்த உணவைச சுந்தரர் உண்டு மகிழ்ந்தார். அப்போது இறைவன் அவர் அறியாதபடி மறைந்தருளினன்.

வந்த மறையவர் இறைவனே என்பதை அறிந்து, "இந்த எளியேன பொருட்டாகத் தன் சேவடி வருந்த எழுந்தருளி, வீடு தோறும் இரந்து உணவு அருந்திய இறைவன் பெருங கருணை இருநதவாறு என்னே!" என்று, உருகி ஒரு திருப் பதிகம் பாடத்தொடங்கினர்.

"முதுவாய் ஓரி கதற முதுகாட்
டெரிகொண் டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும்
மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையில் பலிநீ கொள்ளக்
கண்டால் அடியார் கவலாரே ?
அதுவே யாமா றிதுவோ கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே !"

திருக்கச்சூரி விருந்து காஞ்சீபுரம் சென்று ஏகம்பனை வணஙகி, அஙகுளள வேறு பல கோயில்களையும் வழிபட்டுப் பின்பு வன்பார்த்தான் பனஙகாடடூர், திருமாற்பேறு, திருவலம் என்னும் தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருக்காளத்தியை அடைந்தார். கண்ணபபருககருளிய காளத்தியபபரை வணங்கிச் சில நாள் அஙகே தஙகினர். அஙகிருந்தபடியே ஸ்ரீ சைலமாகிய திருபபருபபதத்தையும், திருககேதாரத்தையும் மனத்தால் இறைஞசித் திருபபதிகம் பாடினர். சிலநாள் கழித்து அங்கிருந்து புறபபட்டுத் திருவொற்றியூரைச் சென்று அடைந்தார்.

# குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ்ச்சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை. B.A., B.T.,)

## 4. ஷட்க்ரீட பதயே நமோநம:

ஷட்க்ரீட—ஆறு திருமுடிகளை யுடைய
பதயே—தலைவனுக்கு ;
நமோநம—போற்றி போற்றி.

### க்ரீடத்தின் சிறப்பு :

உடலில் சிறந்த உறுப்பு தலை. தலைக்கு அணியும் அணி வகையில் உயர்ந்தது முடி என்னும் கிரீடம். இதனை அரசரும் தேவருமே அணிவது மரபு அரசர் என்று போற்றுதற்கு அறிகுறியாய் அமைவது முடியாகும். இந்த அணியைப் புனைவது அரச பதவியை ஏற்றதற்கு அடையாளம். ஆதலால் இச் சடங்கை முடிசூட்டு விழா எனவும் கூறுவர். இவ்வாறு முடியேற்ற மன்னர்களை "முடிவேந்தர்" "மாமுடி மன்னர்" "தனிமுடி கவித்தாளும் அரசு" எனறெல்லாம் போற்றுவர். தமிழக வேந்தரை "முடியுடை மூவேந்தர்" என்றும், சேர, சோழ, பாண்டிய மன்னர்க்குரிய நாடுகளை ஆண்டதால் இராஜ ராஜர் "மும்முடிச் சோழர்" எனப் பெயர் பூண்டதும், 'மலையமான் திருமுடிக்காரி' எனறே ஒரு கொடை வள்ளல் இருந்தமையும் பிறவும், முடி அரசர் அணிவது என்பதை விளக்குவதாகும். ஆயகில அரசரோ அரசியாரோ வெளியில வரும் போது வேறு 'வகையான தலையணி பூண்டாலும், அரியாசனத்தி லிருக்கும்போது மணிமுடி பூண்டே விளங்க வேண்டும் என்ற மரபும் இதனை வலியுறுத்தும்.

தேவர்களும் மகுடம் அணிபவர்கள். அவர்கள் சிவபிரான திருமுன் வணஙகும்போது வரிசைபபட நிற்கும் வண்ணம் திருநந்தி தேவர் தமது பொற்பிரம்பால் தாக்குவதும்,

---

வைத்த முதலால் வணிகர் வளர்வதுபோல்
செயதவினை மூலமெனச், செல்வம் செழிபபதுவே.

அதனால் உதிர்ந்த மணிகளே அடியார் அலகிடும் குப்பையாய் அமைவதும் ஆம். "வந்திறை யடியில் தாழும் வானவர் மகுட கோடி பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையால் தாக்கி, அந்தியும் பகலும் தொண்ட ரலகிடும் குப்பையாக்கும் நந்தி யெம்பெருமான் பாத நகைமலா முடிமேல் வைப்பாம்" என்ற பரஞ்சோதி முனிவர் திருவாக்கை உன்னுக.

## முருகனும் மணிமுடியும்:

எனவே மண்ணரசாளும் மன்னவரும் விண்ணவரான தேவர்களும் முடிசூடுவர் என அறிந்தோம். இனி முருக பிரானும் திருமுடி சூடியிருத்தலின், அவன் மனுநீதி மன்னனும் தேவாதி தேவனும் ஆவன என்பதறிக.

"மாலயன் சுரர் கோனும் உம்பர்
எலாரும் வந்தன மேபுரிந்திடு
வானவர் சுடர் வேலவன்........
.........எனும்படி
மீததக மிசை முடி தரித்தவா"

(பாம்பனடிகள்—பஞ்சாமிர்தவண்ணம்)

[திருமால், பிரமன், தேவர் தலைவனான தேவேந்திரனும், தேவரெல்லோரும் வணங்கி வழிபடும் தேவன், ஒளி வேலிறை வனே என்னுமாறு காட்ட திருததலையில் திருமுடி யணிந்த வனே].

"தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே
தேவர்ச சொர்க்கச் சக்கரவர்த்திப்—பெருமாளே"

(திருப்புகழ்)

குமரப் பரமன் தேவலோக மான சொர்க்கச் சக்கரவர்த்தி யாதலின், முடிபுனைந்துள்ளான என்பதாம்.

## செவ்வேள் முடிபுனைந்த திறம்:

பாவ நிறததின தாருக வர்க்கம் எனப்படும் சூராதியர் களைச் சம்மரிக்கவெனறு தேவர்கள் செவ்வேளை வேண்டினர்.

---

செயலாகும் பண்பகனறு சிரழிவார், சேரும்
முயல்விட்டு, காக்கையை முனபிடிக்க எண்ணுகரே

அப்பெருமானையே 'தேவசேனபதி' என முடிசூட்டிப் பட்டங் கட்டினர். இம்முடி சூடிய செய்தி தென்மொழிக் காந்தத் திலும், பாம்பனடிகளருளிய ஸ்ரீமத் குமார சுவாமியத்தில் 'பட்டாபிடேகத் திருவிளையாடலிலும்' விளக்கமாகப் பேசப்பட் டுள்ளது. அது முதற்கொண்டு நம் குகவேளுக்கு "தேவமோலி" "தேவகிரீடி" (தேவ முடியணிந்த பிரான்) என்ற திருநாமங் கள் வழங்கலாயின.

"ஆறு முடிக்குமரன் ஆனன் அருட்கயிலை
ஆறு முடிகசும் அரன்"

இதுவரையில் கங்கையாறு முடித்த கயிலைக் கண்ணல் குமரனானபோது ஆறுமுடி யணிந்த அண்ணலாய் விட்டான்.

## குமரன் முடியின் குறிப்பு :

முருகபிரான் திருமுடியின் விசேடம் என்ன? மற்றை யோர் அணியும் முடிகளில் முதது, பவளம், இரத்தினம் முதலிய நவமணிகளே விளங்கும். எமது இலை வேலிறைவன மணி முடியிலும் நவமணிகள் விளங்கின. ஆனால் அந்த நவமணி கள் என்பன நவ வியாகரணங்களே யாகும். வித்யாதத்துவ அதி தேவனாக விளங்கும் முருகபிரான் முடியில் நவ வியா கரணங்கள் நவமணிகளாக அமைந்துள்ளன என்பது பொருத்த தந்தானே!

"நவ வியாகரணமே நன்மோலி மாமணியாத்
தவவடிவு கொண்ட தனிக்குமரன்

—(குமரன் குறவஞ்சி)

இவ்விதமான நவமணியிழைத்த ஆறுதிருமுடிகளணிந்த ஆறு முக மலர்களை தேவர், அதிதேவா, தேவாதி தேவரான மகா தேவர் சேவை செய்கிறார் என்று நம் அருணை அண்ணல் விராலிமலைத் திருப்புகழில் கூறுவதைப் படியுங்கள்.

"சீரான கோல கால நவமணி
மாலாபிஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவைசெயும் முக மலராறும்
......நாளும் நினைவது பெறுவேனோ"

ஆகையால், ஆறு முடிகளை யணிந்த தலைவ! போற்றி போற்றி என்று பாம்பனடிகள் பாடுகிறார்.

திருவேரகம்

# திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

ஒருவரையு மொருவரறி யாம லுந்திசித்
திருவினையி னிடர்கலியோ டாடி நொந்துநொந்
துலையினிடு மெழுகதென வாடி முன்செய்வஞ் சனையாலே
ஒளிபெறவெ யெழுபுமர பாவை துன்றிடுங்
கயிறுவித மெனமருவி யாடி விண்பறிந்
தொளிருமின லுருவதென வோடி யங்கம்வெந் திடுவேனைக்
கருதியொரு பரமபொரு ளீது என்றுஎன்
செவியிலினை யருளியுரு வாகி வந்தஎன்
கருவினையோ டருமலமு நீறுகண்டுதண் டருமாமென்
கருணைபொழி கமலமுக மாறு மிந்துளந்
தொடைமகுட முடியுமொளிர் நூபு ரஞ்சரண்
கலகலென மயிலின்மிசை யேறி வந்துகந் தெனையாள்வாய்;
திரிபுரமு மதனுடலு நீறு கண்டவன்
தருணமழ விடையனட ராஜ னெங்களுத்
திகழருண கிரிசொருப னாதி யந்தமங் கறியாத
சிவயநம நமசிவய கார ணன்சுரந்
தமுதமதை யருளியெமை யாளு மெந்தைதன்
திருவுருவின் மகிழெனது தாப்ப யந்திடும் புதல்வோனே!
குருகுகொடி யுடன்மயிலி லேறி மந்தரம்
புவனகிரி சுழலமறை யாயி ரங்களுங்
குமரகுரு வெனவலிய சேட னஞ்சவந் திடுவோனே!
குறமகளி னிடைதுவள பாத செஞ்சிலம்
பொலியவொரு சசிமகளொ டேக லந்துதின்
குருமலையின் மருவுகுரு நாத வும்பர்தம் பெருமானே!

---

புறக்கணிபபார் முன்னே புகழ்நதேத்திப், பினனர்
புறம்கூறி வாழ்நாளைப் புல்லர்கள்தாம் போக்குநரே.

(பதவுரை.) (திரிபுரமும்........புதல்வோனே !)

திரிபுரமும் மதன் உடலும் நீறு கண்டவன் - (முன்னேறிப் பாதித்த) முப்புரங்களையும், (மனத்தில் தங்கிப் பாதிக்கும்) மன்மதன் உடலையும் சாம்பராம்படி மாய்த்தவர் ;

தருண மழ விடையன் - இளமை மிக்க இடபத்தை (என்றும்) ஊர்தியாக வுடையவர் ;

நடராஜன் - (ஐந்தொழில்) திருக்கூத்து ஆடுபவர் ;

எங்கணும் திகழ் அருணகிரி சொருபன் - எங்கும் விளங்கும் சிவந்த அழல்மலை வடிவம் ஆனவர் ;

ஆதி அந்தம் அங்கு அறியாத சிவயநம நமசிவய காரணன் - (எழுந்த அந்த இடத்தில்,) முதலும் முடிவும் காண முடியாத சூக்கும, தூல, காரண ஐந்தெழுத்தாக அமைந்தவர் ;

சுரந்து அமுதம் அதை அருளி எமை ஆளும் - ஊற்றெடுத்த (அருள்) அமுதம் ஊட்டி, (அடியராம்) எம்போன்றுரை ஆட்கொள்ளும் ;

எந்தைதன திருவுருவின் மகிழ் எமது தாய் பயந்திடும் புதல்வோனே - எமது பரமபிதாவான இறைவனுடைய திருமேனியில் மகிழ்ந்து (கலந்து) மன்னியிருக்கும் எமது அன்னையான உமையாள் அருளிய (உயர்) குமரா !;

(குருகு கொடி... ..வந்திடுவோனே !)

குருகு கொடியுடன் மயிலில ஏறி - கோழிக் கொடியுடன் (அருமை) மயில்மேல் ஏற்றம் தோன்ற இருந்து ;

மந்தரம் புவன கிரி சுழல - மந்தர மலை முதலாக உலகில் உள்ள (எல்லா) மலைகளும் சுழலவும் ;

மறை ஆயிரங்களும் குமர குரு என - (விரிந்த), ஆயிரமான வேதங்களும், (ஓம்) குமர குரு என்று ஒலிக்கவும் ;

வலிய சேடன் அஞ்ச வந்திடுவோனே - ஆற்றலுடைய ஆதிசேடன் அஞ்சுமாறு, (வாகையுடன் உலவி) வருபவனே !;

---

இழவுசோம் பேறியைத் தொழில்முகத்தில ஏவல்,
கிழஎருதைக் காளையுடன் ஏருழக் கட்டுவதே

(குறமகள்........பெருமாளே !)

குறமகளின் இடை துவள - குறவர் குல மகளான வள்ளி யம்மையின் (மெல்லிய) இடை நெளியவும் ;

பாத செம் சிலம்பு ஒலிய - சிவந்த ஒளி மயமான (அவர்) திருவடிச் சிலம்புகள் ஒலி செயவும் ;

ஒரு சசி மகளொடே கலந்து - ஒப்பற்ற இந்திராணி மகளான தேவ யானையாருடன் (அத்துவிதமாக) ஒன்றி ;

திண் குரு மலையின் மருவு குருநாதா - திட்பமான சுவாமி மலையில், (அருள்) மணம் (குலவ) இருக்கும் குருமுதலே !

உம்பர் தம் பெருமாளே - வானவருடைய வாகையிற் சிறந்த வண்மையனே !

(ஒருவரையும்.........வெநதிடுவேனே.)

ஒருவரையும் ஒருவர் அறியாமலும் திரிந்து - (எதிர் வருவார், அண்மையர் ஆன) ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள முடியாமல் அலைந்து சுழன்று ;

இரு வினையின இடர் கலியொடு ஆடி நொந்து நொந்து- (நல்வினை தீவினை எனும்) இருவினையின் பயனால் எழும் (அநியாய) இன்ப துன்பங்களின் அழுந்தி, (உடல்) நொந்து (உளம்) வருநதி ;

உலையில் இடு மெழுகது என வாடி - உலைக்களத்தில் இட்ட மெழுகைப்போல் உருகி மெலிந்து ;

முன் செய் வஞ்சனையாலே - பழம் பிறப்பிற் பலரை வஞ் சித்ததன பயனாக;

• ஒளி பெற எழுபு மரபாவை துனறிடும் கயிறுவிதம் என மருவி ஆடி - ஒளிமிக எழுந்து குதிக்கும் (பொம்மல் ஆட்ட) மரப் பதுமைபோலக் கட்டியிருக்கும் (கனமக்) கயிறுகள், போன போன விதம் எலலாம்போய், (ஆட்டம் பல) ஆடி ;

---

புல்லைக் கிழளருது, குதபபிபுறம் தள்ளலபோல்,
புல்லரிடம் தந்தபொருள், கைக்குவரா, .போய்விடுமே

விண் பறிந்து ஒளிரும் மினல் உருவது என ஓடி - விண்ணைப் பிளந்து ஒளி பரப்பும் மின்னலின் சாயைபோல், (வாழ்க்கைப் பயணத்தில், ஓயாது பல இடங்களில் ஓடி) ஓடி ;

அங்கம் வெந்திடுவேனை - (மயானத்தில்) உடல் வெந்து மறைந்து போகும் (பரிதாப ஏழையான) எனனை ;

(கருதி.........ஆள்வாய் !)

கருதி - ஒரு பொருளாக மதித்து ;

ஒரு பரம பொருள் ஈது என்று என் செவி இணையில் அருளி - ஒப்பற்ற பெரிய பொருள் இதுவே என்று எளியேன் இரு செவிகளிலும் உபதேசித்து ;

உரு ஆகி வந்த என கருவினையொடு அருமலமும் நீறு கண்டு - மனித தேகம் கொண்டு வந்துள்ள, கருவில் இருப்பதற்கு ஏதுவான எனது கர்மத்தையும், (சாதற்கு) அரிய மும் மலங்களையும் சாம்பராக்கி ;

தண் தரு மா மென் கருணை பொழி கமலமுகம் ஆறும் - தண்மை காட்டி, பெருமையும் மென்மையுமான (புனித) கருணை(த்தேன்) பொழிகின்ற (அழகிய) கமலம் போன்ற ஆறு திருமுகங்களும் ;

இந்துளம் தொடை மகுட முடியும் - கடப்பமாலை யணிந்த (மாபெரும் ஆறு) மகுடங்களும் (தோனற);

ஒளிர் நூபுரம் சரண் கலகல என - ஒளி பரபபும் திருவடிகளில் அணிந்த சிலம்புகள் கலகல என்று ஒலிக்க ;

மயிலின் மிசை ஏறி வந்து - மயில் மேல் ஏறறம் வெளிப்பட எழுந்தருளி வந்து ;

உகந்து எனை ஆள்வாய் - ஆநந்தமாக அடியேனை ஆட்கொண்டருளும், (எ - று.)

---

உறவினர்போல், உள்பகைஞர் ஊன்றிக் கெடுப்பர் ;
அறவர், அனருர்களை நீங்குகின்ற ஆண்மையரே.

விரிவுரை.

உடலில் மலம் உளது. அது போல், உயிரில் மும்மலம் ஊன்றியுளது. காலத்தில் மலம் கழிந்தால், ஊனம் அடையாது உடல். உயிரில உள்ள மலம் ஒழிந்தால், அவ்வுயிர் இழிவான பிறவி எய்துவது இல்லை.

மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை மூன்றும், உடலில் மலமும் உயிரில் அழுக்கும் உள்ளவரை நிகழ்பவை. பொல்லாத அந்த அழுக்குப் போய்த் தொலைந்தால், ஆசைகள் யாவும் அழிந்துவிடும். அம்மலம் அகல யாது வழி ?

மும்மல சொருபம் முப்புரம்; அவைகளைச் சிரித்து எரித்தவர் சிவபிரான். காமச சேற்றில காலாழும்படி, அகில உலகையும் ஆட்டி வைப்பவன மனமதன்; அவனைப் பார்த்து எரித்தவர் அப் பரமேசா.

கூருததுானறி நோக்கினல், இழிவான காம ஆட்சிக்கு இடம் இல்லை. ஆணவம் ஆட்டம் போடும் காலத்தில், மாயை மயக்க ஜாலம் செய்பொழுது, கன்மமலம் கால் தட்டும் நேரத்தில், சிதைந்த மனம் ஆகாமல சிரித்துக் கொண்டே இருப்பவர் முன், மும்மல வேகம் முடஙகிவிடும்.

மும்மல கண்டனம், காம கண்டனம் செய்தவர், என்றும் இளையரா யிருபபர்; அவர் பரிசம் பட்ட எபபொருட்கும், நரை திரை முப்பு நண்ணுவது இல்லை. அங்கிலை எய்தினோர், என்றும் தருமராஜர் எனப்பெறுவர். அதை அறிவிககவே, தரும தேவதை, தருண மழ விடை எனும் பெயர் தாங்குகிறது. அந்த விடையே அமலரது ஊர்தி.

எழுநத புரத்தையும், காமனையும் எரித்த தரும விடையூரும்*தறபரா், படைப்பு, காப்பு. அழிபபு, மறைபபு, அருளல் எனும் ஐந்தொழில திருநடம் ஆடியபடியே இருக்கிறார். அவர் ஞாயிறறுக்கிழமை யென்று ஓய்வு பெறுவது*இல்லை.

---

அககககண் இலலார்முன, முகக்கண்ணர் வாழ்தல்,
பகையாம், படிறும், பாவமாம் பார்மின இதே.

ஒரு விநாடி ஓய்வு கொண்டாலும், அகில சராசரமும் அழிந்து விடும். ஆதலின் அவர், என்றும் நடராஜர் என்று இருக்கிறார்.

அண்ணுமலைக்கு அரோஹரா! நாடெங்கும் கார்த்தி கையில, இந்த நாதம் எழுகிறது. காரணம் என்ன ?

அவர் தீப்பிழம்பான திருமேனியர்; அந்த ஞானத்தீ, வியாபகமாகி எங்கும் விளங்குகிறது. அத்தீ, உயிரில் மருவிய இருளை ஒழிப்பதாக என்ற பிரார்த்தனை நினைவில், விளக்கு ஏற்றியபின் செய்யும் விண்ணப்பமதான. அண்ணுமலைக்கு அரோஹரா என்பது.

எங்கணும் திகழ் அருணகிரி சொருப! என்றுர்கள் அன்று: அண்ணுமலைக்கு அரோஹரா என்கிருர்கள இன்று. எல்லாம் சொல வேற்றுமைதான; பொருள் மட்டும் ஒன்று தான.

ஆரம்பும் நமசிவாய; இது இராஜ மந்திரம் " எனப் பெறும். ம-எனக்கு; ந-இலலை; சிவாய - (காணப் பெறும் கருதப்படும் யாவும்,) சிவனுக்கே என்ற உணர்வுடன் தொடர்ந்து உருவேறற ஏற்ற,

நகரம் - திருவடி; மகரம் - தொப்புள்; சிகரம்-தோள்கள்; வகரம் - திருமுகம்; யகரம் - திருமுடி என, தூல ஐந் தெழுத்தே தெய்வப் பரமன் திருமேனி என்பது தெரிதலுறும்.

தற்பரர் திருமேனி இப்படித தரிசனம் ஆனபின், நமசி வாய என்பது, சிவாய நம என மாறி ஒலிக்கும். அந் நிலையில,

உடுக்கை - சிகரம், வீசுகரம் - வகரம்; அபயகரம் யகரம்; மழு - நகரம்; முயலகன — மகரம்.

இந்த ஐந்தெழுத்தே தாண்டவம செய்து, படைத்தல், காத்தல அழித்தல் மறைத்தல் அருளல் எனும் ஐந்தொழிலைச் செய்கிறது என அறிதலுறும்.

---

அநதரஙக மாறருரின நேர்பகைவன நல்லவனே;
சநதாபபம நோக்கித் திருததுகின்ற சால்புறுமே.

இதனை நலமுறச் சேவிக்கும் நல்லுயிரை நடு இருத்தி, முன்னும் பினனும் சிவம் காக்கும். இங்கிலேயில் அந்த எழுத்துகள், சிவயவசி எனறு காரணப் பெயர் கொணடு கவினலுறும். (ய - ஆன்மா.)

சிவயநம நமசிவய காரணன் என்று கருதப்பெறும் பரம உபகாரியான அப் பரமபிதாவின ஆதியும் புரியவில்லே; அந்தமும் தெரிந்தது இல்லேயே எனறு. ஆன்மா இந்த இடத்தில் அலறும்.

அது கண்டு எம்பிரான் திருவுளம் இரஙகுகிறது. சுரக் கிறது அருளமுதம். உயிர்க்கு ஊட்டுமாறு, இறைவியைப் பரன ஊக்குகிருன். உணபிக்கிருர் உமாதேவியார்.

அழுதழைதத ஆளுடைய பிள்ளேயார்க்கு. அருமைக் காழியில ஊட்டிய அருளற்புதம், இங்கு நம் நினேவில் எழுந்து நிற்கிறது அலலவா !

காட்டினன பரன். ஊட்டிய தேவி, இததகைய சந்தர்ப் பங்கள் இன்னும் நேரலாம் என்று, எம்பிரான திருமேனியில் இடம் கொண்டு மகிழ்கின்ருள். பேருன அசசேவை பெற்று, உரிய உறவை உணர்ந்தபின, அமுதை உதவி...எனது தாய் பயந்திடு புதல்வோனே! எனறு, ஆர்வம் கொண்டு உம்மை அழைக்கினருேம்..

கொடியாகிய அருள் காதச் சேவல், கொக்கறு கோ என்று குரல் கொடுக்கின்றது. வருகிருன ! ஞான சூரியன் வருகிருன் என, உணருமாறு உயிர்கட்கு உணர்த்துகினற சமிகைரு இது.

அதை யடுதது, ஊங்கு எனறு குரல் கொடுக்கிறது ஓஙகார மயில. வெற்றிச சேவல விருது கூற, வீர மயில மேல நீர் வரும் வேகததில, சுறறு மலேகள யாவும் சுழலுமே !

---

இழிகுணததர், செலவரே எனருலும பாழே;
பழையமோர் தககதல ; பார்அறிநத உண்மையிதே.

குமர குரு! குமர குரு! என்று, கூர்த்த உணர்வொடு மறைகள் கோஷிக்குமே!

ஆயிரம் தலை அநந்தன அஞ்ச, கிடுகிடு என இப்படி ஒரு நொடியில் உலகை வலம் வரும் வண்மையனே! என்று, ஆர்வத்தொடு வாய உம்மை அழைக்கின்றதே!

வலதத்தில் வளளியார்; இடத்தில் தேவ யானையார்; நடு இருக்கும நம்பன நீ. முதன்மை ஏரகத்தில, இது முழுமைச் சேவை எனறு எண்ணுவது பலர் இயல்பு.

என்ன இது! இடத்தில் இருந்த தேவயானையார் எங்கே? இருமையில் ஒருமை தோன்ற, அவர் திருவுருவம், உமது திருமேனியில ஒனறியதோ? அடடா! என்ன அதிசயம்!

ஏரகக் குனறில் இருபபவர் நீர்! ஆ! அஙகு எஙகே இருக்கிறீர்? ஓ! மலையில நீர் ஒனறிய மரபா இது? அதனால் தான், மலையும் சுவாமிமலை என்று ஆயதா? இந்த அத்துவித சம்பந்தம், அறிவாரும் இல்லையே ஐயோ!

பேசும் மோனப பெருமாட்டியார் வளளியார்; அவரது இடை துவளும் சாயை தோனறவில்லையேல், சல சல என்று அவர் திருவடிச் சிலம்பு ஒலிககவில்லையேல, முதல்வா! அம் முதனமை அத்துவிதம் முனிவர்கட்கும் புரியாதே! அந்த அனுபவத்தை, ஆனமாக்கடகு வள்ளியார் குறிப்பாக அறிவிக்கிறரோ எனனவோ!

அறுபது ஆண்டின அதிதேவதைகள், படிகளா யிருந்து, அந்த அனுபவததைத் தாமும் பெற ஆவலித்துளர்.

உம்பர் எனறு மேலிடததவரை உணர்பவர் யாம். கீழ நோககினரை ஏறகாமல, அம் மேலிடத்தவரைக் காக்கும் மேலோன ஆன உம்மை, பெருமானே எனனுமல், எப்படித் தான பெரும அழைபபது?

---

வறியரே எனருலும், வாழறிஞர் நல்லர்;
நறுமணநெய் நாள்பட்ட தானாலும், நல்லதுவே

புதல்வோனே ! மயில் ஏறி வந்திடுவோனே ! குருநாதா ! பெருமாளே ! கேண்மையேன் பரிபவத்தைக் கேட்டருளும் !

தாய் தந்தை தமர் தாரம் மக்கள் என, பரவிய உறவினர் பலர் ; நகை முகமான நண்பர் பலர் ; வாழ்க்கையில், பகை முகம் ஆனாரும் பலருளர்.

கூடியிருந்த கொள்ளிபோல், உடன பிறந்தார் ஊடி நின்றார், காரணம் என்ன ? முன்னைய பிறப்பில் இவர்கள், முதனமை விரோதிகள். கொடுத்த கடனைக் கொள்ளுமாறு, பிள்ளைகளாய வந்து சிலர் பிறக்கினறார் ; வாஙகிய கடனை வழங்குவம் எனறு, பெருகி மக்களாய்ச சிலர் பிறப்பதும் உண்டு.

ஒருத்தியை நோக்கி, இசசையால பலவிளித்து ஒருவன் இறந்தான. இது முனபிறப்புச செய்தி ; அவளே அடுதத பிறப்பில் மனைவியாய் வந்து, மானம் அழிக்கும் மரபும் உண்டு

சீடனுகித் தொண்டு செய்து, அந்த வாசனையால், துணை வியாய்ப் பிறந்த தூய வரலாறுகளும் பலவுள.

இருந்த பாட்டனார் இறந்தார். பிறகு அவர் எதிர் வீட்டில் பிறந்தார். பண்டைய வாசனையால், பாலப் பரு வத்தில், வாழ்நத இலலததிற்கு வருகிறார். விரட்டி யடிக் கிறார்கள் அவ்வீட்டவர். இபபடியே ஆயிரம் ஆயிரமானது, விரிந்த பிறவியின விசித்திர செய்திகள். இவைகளை ஊன்றிச் சிறிது உணர்நதால், ஐயோ ! உருவா யிருக்கும் இதயம் உடைந்துவிடும் !

மோசமான மாயையால் அறிவு மூடுண்டு, வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியாமல், ஒட்டாது பறறுது ஒதுங்குகின்ற உலகம் இது ! பிறவியின் மயக்கம் பெரியதுதான. இநதக் கண் மூடி வாழ்வு, இபபடியே மண் மூடிப் போகிறதே !

---

அறிவுடையோர், தெள்ள ஆராய்ந்து செய்வர் ;
மறிவுடையோர், வேகத்தால செய்தசெயல் மங்கும்மே

இந்த வாழ்வில், இருவினை மோதல்கள் எத்தனை ? அவை கட்குத் தக்க இன்பமும் துனபமும், பொருபொருத்து வந்து போட்டி நாடகம் போடுமானால், என் செய்வன் எளியேன் ?

இன்பத்தில் துவளல்; துன்பத்தில் நெளிதல்; ஒ.ஈறு துன்பக் கனல; மற்றொன்று, இன்பப் பெயரால் உரு.ான எரி நெருப்பு.

இந்த இரு வெம்மைகளால், உடம்பெலாம் உள்ளமெலாம், 'உலையில் இடு மெழுகதென வாடி.' உருகி ஒழிகிறதே !

மரத்தால் பதுமை செய்து, நுண்ணிய பல நூல்களால் பிணைத்து, பொம்மலாட்டம் காட்டும் புதுமை உண்டு உல கத்தில். அதுபோல, கன்மக் கயிற்றில் கடடி, கணணிமைத்து, கையாட்டிக் காலாட்டி அத்தா ! ஆட்டம் பல ஆடுமாறு எம்மை ஆட்டுகின்றாய் !

"நன்னாரில் பூட்டிய சூத்திரப பாவை, நன்னார் தப்பினால்
தனாலும் ஆடிச சலித்திடுமோ? அந்தத் தனமையைபபோல்,
உன்னால இங்குயானும் உழலவது அல்லால், மற்று உனைப் பிரிநது
என்னால இங்கு ஆவதுண்டோ ? இறைவா! கசசி யேகம்பனே"

எனறபடி, இருக்கிறது இவ்வுலக வாழ்வு.

முன் பிறப்பில், வாழ்ந்தாரை எபபடி யெபபடி வஞ்சித் தேனோ ? அதன பயனாக, தோல பொம்மை விளையாட்டாய், உறவினர், பகைவர் நண்பர் எனும் பெயரால, பலர் ஆடிப் பாடி எனமுன் அலுக்கினரா ; அதே கதிதான் என் கதியும்.

மின்னி மறையும் மின்னல்போல், வாழ்ந்த வாழ்வில், மரணச் சாயை வந்து மடக்குகின்றதே!

இறுதிச செய்தி எனன ? மயான காண்டந்தானோ ! இத்தகைய கேவல நிலையில உளள என்னையும் ஒரு பொரு ளாக்கி, ஒரு மொழி உபதேசம் உணாத்தினீர் ! " அறிவாரும் இல்லையோ ஐயோ ! எனனை ஆர் எனறு அறியாத அஙக தேசததில், வறிதே காமத்தீயில் சிக்கி, உள்ள வான்பொருள்

---

பகைப்பயிர் ஓஙகவே, நீர்வார்த்தல் பாவம் ;
நகைத்து அறக்கடவுள் நாசப் படுத்திடுமே.

தோற்கவோ வந்தேன்?" பொன்னும் மண்ணும் பொருள அல்ல: பரம பொருள்; பெரிய பொருள் எனும் அந்தப் பிரஹ்மம் இது என்று, நீர் அறிவித்த கருணையை மறப்பேனே அடியேன்! ஒரு செவியில் பிறர் உபதேசிப்பர், வியாபக உமது உபதேசம், என இரு செவிகளில், ஏக கால உப தேசம் ஆயதுவே! கருப்பக குழியில தங்கவைக்கும் கன்மங் களும், சாகா மும்மலஙகளும் சாம்பராம்படி, கமல ஆறு முகம் காட்டி, ஆறு மகுடம் காட்டி, கலந்துகொள்! கலந்துகொள் எனும் பொருளில், கல கல என்று சிலம்புகள் ஒலிக்கும் திருவடி தரிசனம் திகழக் காட்டி, மயில் மேல் அமர்ந்த கோலத்துடன், உவகை காட்டி என்னை ஆள் ஐயா! ஐயா என்று அலறியபடி.

வாழ்க திருப்புகழ் வளம்!

ஓம்.

---

அநுபூதி விளக்கம்

## அருளும் ஆண்மையும்

(கி. வா. ஜகந்நாதன்)

கருதா மறவா நெறியைக் காணுவதற்குத் துணையாக இருதாளாகிய தாமரைகளைத் தரவேணடும் என்ற விண்ணப் பத்தை எழுதிய அருணகிரிநாதா அதற்குமேல் விலாசம் எழுதுகிருர்.

கருதா மறவா நெறிகாண எனக்கு
இருதாள் வனசம் தரஎன் றிசைவாய்?

எனபது அநத விணணப்பம். நாம் கடிதம் எழுதுவதாக இருந்தால, முதலில கடிததததை எழுதிவிடடுப் பிறகு விலா சத்தை எழுதுவதும் உண்டு. விலாசததை முதலில் எழுதி அப்பால கடிதத்தை எழுதுவதும் உண்டு. உறையாக இருந்தால் செய்தி எழுதும் கடிதம் வேருகவும், விலாசம் எழுதும் உறை வேருகவும இருக்கும். ஆனல் கார்டாக

---

அறநூலவர், சிலசமயம் ஆயாதே சொலலித்,
திறமிழந்த சோர்வதனுல், தீமைபல நேர்ந்துளதே.

இருந்தால் இரண்டையும் அதிலே எழுத வேண்டும். விலாசம் எழுதிய கவரை எறிந்துவிட்டுக் கடிதத்தை மாத்திரம் வைத்துக் கொள்ளலாம். கார்டின் திறத்தில் அப்படிச் செய்ய முடியாது. விஷயமும் விலாசமும் ஒன்றியே இருக்கும். ஒன்றைவிட்டு ஒன்றைத் தனியே பிரித்துக் குப்பைக் கூடையில் போடமுடியாது.

அருணகிரியார் விண்ணபபம் ஒரு வகையில கார்டைப் போல இருக்கிறது- முதலில் விண்ணப்பத்தை எழுதிப் பிறகு விலாசத்தை எழுதிய கார்டு அது. விண்ணபபத்தைப் பார்ததோம, இனி விலாசத்தை, முருகனைப் புகழும் பகுதியைப் பார்க்கலாம.

வரதா, முருகா, மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே!

நான்கு வகையாக முருகனை விளிக்கிறார் வரதன், முருகன, மயிலவாகனன, விரதா சுர சூரவிபாடணன என்னும் நானகு திருநாமஙகளையும் விளியாக்குகிறார்.

முருகன் பேரருளாளன். அருள் சுரக்கும் பெருமான் என்பதை உணர்நதே இந்த விண்ணப்பத்தை அருணகிரி நாதர் சமர்ப்பிக்கிறார். வரதன எனபது அருளாளன என்னும் பொருளுடையது. விண்ணபபதததைக் கேட்டு அருள் பவன எனபதை முதலில் நினைக்கிறார். போடும் விண்ணபபம் பயன்பெற வேண்டுமென்ற கருத்துடையவராதலால.

அடுத்தபடி அவனுககேஉரிய திருநாமததைச சொன்னார்.

வரதா, முருகா!

அவன உலகததிலுள்ள ஆருயிர்களுக்குப் பெருஙகருணை பாலிக்கிறவன. தனனை வந்து அடைந்து வருந்தி அன்பு செய்கிறவர்களுக்கு அருள்வது மிகச சிறப்பான கருணையாகாது. தன்னை நம்பினவர்கள துனபுறும்போது அவர் இருக்குமிடம் சென்று அவர் துனபததைத் துடைபபதுதான பெருங் கருணைக்கு இயல்பு. அவவாறு தன் அடியார்களை நாடி வேக மாகச செய்வதற்கென்றே முருகன ஒரு வாகனததைக கொண் டிருக்கிறான. டாக்டர்கள் நோயாளிகள உள்ள இடம் சென்று மருத்துவம் செய்ய வேகமாகப் போகும் காரை வைத்திருக் கிறார்கள் அல்லவா? அதுபோல முருகனும் அனபர்களிடம்

சென்று அவர் துன்பத்தை அழிக்கும் பொருட்டே மயிலை வாகனமாகக் கொண்டிருக்கிறான்.

வரதா, முருகா, மயில் வாகனனே !

அடியார்களைப் பாதுகாப்பதோடு அடியார்களுக்குத் தீங்கு புரியும் பகைவர்களை அழிப்பதும் முருகனுடைய செயல்களில் ஒன்று. தேவர்களுக்கெல்லாம் தலைவனாகவும் சேனாதிபதி யாகவும் இருக்கும் ஆண்டவன் அவர்களுக்குத் துன்பம் உண் டாக்கிய அசுரர்களையும், சூரபதுமனையும் அழித்தான். அசுரர் கள் தேவர்களைக் காட்டிலும் வலிமை யுடையவர்களாக இருந் தார்கள். அவர்களும் விரதம் இருந்து நான்முகன் முதலியவர் களிடம் வரம் பெற்றவர்கள். அந்த வரத்தினால் வந்த வலி மையை உலகுக்கு நன்மை செய்யும் துறையில் பயன்படுத்த வில்லை. தேவர்களுக்கும் நல்லவர்களுக்கும் தீமைபுரிவதற்கே உபயோகித்தார்கள். அசுரர்கள் அறுபத்தாறுகோடிப் பேர்கள். அவர்களுக்கெல்லாம் தலைவனாக இருந்தவன் சூரபன்மன்.

இந்த அசுரர் கூட்டம் பெரியதாக வளர்ந்து யாராலும் பேதிக்க ஒண்ணாத திண்மையுடன் இருந்தது. அவர்களின் வியூகத்தைப் பிளக்க இந்திராதி தேவர்களால் முடியவில்லை. முருகன் திருஅவதாரம் செய்து அந்தக் காரியத்தைச் செய் தான். சூரனுடைய படைகளை உடையச் செய்தான். யார் வந்தாலும் அஞ்சாத திண்ணிய நெஞ்சை உடையவன் சூரன்; அசுரர்களும் அத்தகையவர்களே. அந்தத் திண்மை முருகனால் உடைந்தது. அடியார்களுக்கு வரதனாக இருக்கும் முருகன், அல்லாதார்களுக்கு அவர் கூட்டத்தைப் பிளக்கும் பேரிடியாக இருக்கிறான்.

பக்தர்களுக்கு அருள்செய்யும்போது தன் பத்தினிமாருடன் முருகன் மயில்மேல் எழுந்தருள்வான்.

"நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும்
கோலக் குறத்தி யுடன் வருவான்"

என்பது கந்தர் அலங்காரப்பாட்டு. அப்போது மயில் மெத்தென்று நடையிட்டு வரும். சூரபன்மனோடு போர் செய்யப் போகும் போதும் முருகன் மயில்மேல் தான் எழுந் தருள்வான். அப்போது அவன் தனியே செல்வான். அப்போது மயில் உலகமெல்லாம் கிடுகிடாயக்க நடைபோடும்.

" கலாபப் புரவியின் மேல்
தாங்கி நடக்க முறிந்தது சூரன் தளம் "

என்பது அலங்காரம்.

முருகன வரதனாக வரும்போதும் மயில் வாகனனாக இருப்பான்; சூரசங்காரனாக வரும்போதும் மயில் வாகனாக இருபபான. ஆதலின் இடையே மயில் வாகனனே எனபதை வைத்தார். விரதத்தையுடைய அசுரர்களையும் சூரனையும் பிளப்பவன அவன எனபதைக் கடைசியில் வைததார்.

விரதா சுரசூ ரவிபா டனனே !

விரத அசுர சூர விபாடணன அவன்; விபாடணம்— பிளததல். அசுரர் செறிந்திருநத கூட்டத்தைப் பிளந்தான. மாமர மாக நின்ற சூரனையும் பிளந்தான். வரதன என்ற திருநாமத் தால் அவனது கருணையும், அசுரவிபாடணன் என்பதால அவ னுடைய வீரமும் புலனாகின்றன. " அருளும் ஆண்மையும் உடைய முருகா, மயில் வாகனக் கடவுளே, உன்னை வேண்டு கிறேன், கருதா மறவா நெறிகாண ஆசைகொண்டேன். அதற்குத் துணையாக இருபாத பங்கயங்களைத் தந்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்து கொள்ளுகிறார்.

கருதா மறவா நெறிகா ணஎனக்கு
இருதாள் வனசம் தரஎன் றிசைவாய் ?
வரதா, முருகா, மயில்வா கனனே!
விரதா சுரசூ ரவிபா டனனே.

[சகல கேவலம கடந்த நெறியைக் காணும்படி அடி யேனுக்குத் துணையாகும் பொருட்டு நின இரண்டு திருவடி களாகிய தாமரை மலர்களை வழங்க நீ எப்போது திருவுள்ளம் கொள்வாய்? அருளாளனே, முருகா! மயிலேறும் பெருமானே, விரதபலத்தை யுடைய அசுரர் கூட்டததையும், சூபரனமனையும் பிளநதவனே! வனசம் - தாமரை. வரதன - அருள்புரிபவன. விரதா, அசுர சூரவிபாடணனே என்று இரண்டு விளியாகப் பிரிததும் பொருள் கொள்ளலாம். அபபோது விரதா என்பதற்கு விரதங்களின இலட்சியமாக இருபபவனே என்று பொருள் கொள்ளவேணடும். விபாடண - பிரித்தல்; ணகரம் தமிழில் ணகரமாயிற்று.]

இது கந்தர் அநுபூதியில் 21-ஆம் பாட்டு.

237-ம் பக்கத்தொடர்ச்சி

## "கடவுள்" — சச்சிதானந்தன்

(இலந்தையடிக் கௌளிய வித்துவான் இராஜ சிவ. சாம்பசிவசர்மா)

" தொல்லைப் பெரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லல்அறுத் தானந்த மாக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னும் தேன்."

என்று கூறியுள்ளார். இறைவன திருவருளைத் 'தேனிலாவிய திருவருள' என்று மாணிக்கவாசகப் பெருமானூர் கூறுதல் உணரத் தக்கது. மலரிலுள்ள தேனைப பெறுவதற்கு அன்பு கொண்ட வண்டு முதலாயவற்றிற்குத்தான் திறமையுளதாதல் போல, இறைவனிடம் பற்றுளளவாக்கே உடல் முதலானவற்றுள் இறைவனை யுணரும் திறமை உளதாகும். எனவே, இறைவனை 'சித்தத்துள் தித்திக்கும் தேன்' என்று ஆன்றோர் கூறுவர்.

தேனிற்கு நெகிழ்சசி யுண்டு என்றோம். சித்தத்துள் இருந்து திததிக்கும் தேன இறைவன எனில அவனிடத்தும் நெகிழ்சசி யிருததல் வேண்டுமே எனின், அவனிடத்திலும் நெகிழ்ச்சியுணடு. அவனிடத்துளள நெகிழ்சசி அனபு. அவன சர்வ ஜீவ தயாபரன. எல்லா உயிர்களிடத்தும் இரக்கமும், அனபும், கருணையும் உடையவன. அவனிடமுள்ள அனபு முறுகி வளாந்து கருணைப் பிரவாகமாக எலலா உயிர்களிடத்தும் பரநது பாயகினறது. அவன அன்பாகளிடததும் வனபர்களிடத்தும் விளஙகுகினறான. அன்பர்களிடததில் நிறைந்திருந்து கருணை மிகபபுரிந்து நல்லியலபுகளை வளரசசெயது நல்வழிப் படுததுகிறான. தீயவரிடததிலிருந்து, தண்டித்து

---

உபகாரி முனசென்று ஓயாது கேட்டால்,
அபகாரம் நேர, அதிர்ப்பதில்லை அன்னவரே.

நல்வழிப் படுத்துகிருன். இது அவனுடைய அறக்கருணையும் மறக்கருணையுமாகும். அத்தகைய பெருமானை அடைந்துய்ய விரும்புவோரிடத்தும் அந்த உள் நெகிழ்ச்சியாகிய அன்பு முதிர்ந்து பெருகி இருக்க வேண்டும். அவனை நினைந்து நினைந்து அன்பா லுள்ளமுருகி அனபு பிழம்பாய்த் துலங்க வேண்டும். அனபினை ஆண்டவனிடத்தும் அனைத்துயி ரிடததும் கொள்ள வேண்டும். அன்பிலார் எலும்பைத் தோலால் போர்ததப்பட்ட உடலுடையவர் எனறே கூறபபடுவர். அன்புடைமையின இனறியமையாமையை உணர்நதே திரு வள்ளுவர் 'அனபுடைமை' எனனும் அதிகாரததையும் திருக்குறளில் அமைத்துள்ளார். அன்புடைமையால் இவ் வுலகம் இயங்குகின்றது எனபது உற்று நோக்குவார்க்குப் புலனுகாமற் போகாது. இறைவனே அனபு வடிவினன். இறைவனை மாணிக்கவாசகர், "ஈறிலாப பதங்கள் யாவையும் கடந்த இனபமே, எனனுடை அனபே" என்று கூறுதல் நோக்கத் தக்கது. அவர் 'அகம்நெக அள்ளூறுதேன் ஒப் பானே" என்று கூறுதலும் உணரத் தக்கது. தாயுமானவர், 'அரும்பொனே, மணியே, என் அனபே, அன்பிலூறும் ஆனந்த வெள்ளமே" எனறழைத்து மகிழ்கினறுர். 'அன் பெனும் வலையுள அகபபடு மலையே' எனறு இராமலிங்கர் கூறுதல் அறிதற்பாலது. 'அனபருக் கனபனே' என்று மாணிக்கவாசகர் கூறலால், அன்பு கொண்டுதான் அபபெரு மானை அகபபடுத்தலாகும்., கண்ணப்பரோ, 'அன்பு பிழம் பாய்த் திரிவார்' என்று சேக்கிழாரால போற்றிக் கூறபபட் டுளார். மாணிக்கவாசகரோ, "கண்ணப்பன ஒபபதோர் அன்பின்மை கண்டபின், எனனப்பன் எனனையும் ஆட்கொண் டருளி" எனறு கூறித தன எளிமையும் இறைவன பெருமை யும் நன்கு புலனுகுமாறு செய்துள்ளார்.

---

ஆய்வினறித, தீயாரை நம்பிஒனறை ஒபபடைததல்,
காய்மீனமுன், பூனையைக் காபபுவைத்த செய்தியதே.

அன்பு வளரும் மனத்தில் ஆரா இன்பப் பொருளான இறைவன் கனிந்த சுவைதரு பழமாக விளங்குகிறுன்.

" எத்துணையும் பேதமுறுது எவ்வுயிரும் தம்முயிர்போல்
எண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்ருர் யாவரவர்
உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமென நான்தெரிந்தேன "

என்று திருவருட்பிரகாச வள்ளலாரான இராமலிங்கவடிகள் கூறுவது இங்கு அறியத்தக்கது. ஆதலால் இறைவனை 'அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனி' எனறு நன்குணாதல வேண்டும். பிஞ்சு முற்றிக் காயாகிக் கனிந்து கனிந்து இன்ப மும் சுவையும் தருகின்ற கனி யாகினறது. அதுபோலம் உள்ளம் நெகிழ்ந்து நெகிழந்து கனியக் கனிய அன்பு பெருகி இறைவனது ஆரா இனபமாகிய ஆனநததததை அளிக்கினறது. அவ்வுள்ளமே இறைவன் நடனம் புரியுமிடமாகுமென " அவ ருளநதான் சுத்த சிததுருவாய எம்பெருமான நடம்புரியும் இடம் என நான தோநதேன் " எனற இராமலிங்கடிகள் கூறுவது ஊன்றிக் கவனிக்கத தககது.

அம்பலம் எனபது சபை. அது பொதுவிடம். யாவரும் செலலக்கூடிய இடம். சிவபெருமான ஐந்து அம்பலஙகளில் சிறப்பாக நடனம் புரிவதாகக் கூறுவர். சிதம்பரத்தில் பொன்னம்பலததிலும், மதுரையில் வெள்ளியம்பலத்திலும், திருநெல்வேலியில தாம்பிர அம்பலததிலும், திருககுற்ருலததில் சித்திர அம்பலததிலும், திருவாலங்காட்டில் இரததின அம்ப லத்திலும் சிவபெருமான நடனம் புரிகினருா எனறு சிறப பாகக் கூறுவர். இவற்றுள் பொனனமபலத்தைக் கனகசபை

---

நெய்யால அபிடேகம் செயகின்ருர், நீள்வினைகள்
செய் துனபால், தெய்வததைச் சீறுநரும் உள்ளனரே.

என்றும் கூறுவர். இதற்குச் சித்சபை என்ற பெயரும் உண்டு. ஆகாயபூதத் தலமாகச் சிதம்பரத்தைக் கூறுவர். ஆகாயம் பெருவெளி. ஆகாய வெளியாகிய பெருவெளி இல்லாத இடமே இல்லை. இப் பெருவெளி யாவர்க்கும் உரித்து. எங்கும் இருப்பது. இறைவனும் யாவர்க்கும் உரியவன; எங்கும் இருப்பவன; அவன் இல்லாத இடமே இல்லை. இறைவன் புரியும் நடனம் ஆனந்தத் தாண்டவம் எனப்படும். அவன் புரியும் நடனம் ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் புரியும் அற்புத ஆனந்தத் தாண்டவம் எனப்படும்.

மக்களின் உடலுறுப்பில் மிகச் சிறந்த பாகம் இருதயம். இருதயம் எப்பொழுதும் துடித்துக் கொண்டே இருக்கிறது. இந்தத் துடிப்பு நின்றால் மனிதன் பிணமாவான். இறைவனது நடனம் நின்றால் உலகம் நடைபெறுதலும் ஓய்ந்து ஒடுங்கி விடும். இதனை அறிந்தன்றோ, அவன் கூத்தினைத் 'தெய்வக் கூத்து' என்பர். தெய்வ சம்பந்தமானது எளிதில் அறிய வொண்ணாதது. இறைவன் நடனம் ஒடுங்கினால் உலகம் ஒடுங்கிவிடும் என்று அறிவுடையோர் அறிவார். மற்றையோர் உணரார். ஆதலின், உலகம் உய்யவேண்டும் என்னும் அருட்பெருங் கருணைப் பெருக்கால், 'அம்பலம் ஆடு அரங்காக வெளிவளர் தெய்வக் கூத்து உகந்தாய்' என்று எல்லாம் வல்ல இறைவனை வாயார வாழ்த்தலாம் அன்றோ? இரவும் பகலும் ஓயாது, நாம் அறியாமலிருக்கவும் இதயம் துடித்துக் கொண்டே இருப்பது போல, இறைவனும் அல்லும் பகலும், அனவரதமும், 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதன்' ஆக விளங்குகின்றான்.

இத்தகைய பேரருட் பெருங்கருணைத் தடங்கடலான எல்லாம் வல்ல இறைவனின் அதி அற்புதப் பெருமைகளை யெல்லாம் முற்ற உணர்ந்த முழுஞானிகளே நன்குணர

கன்றினமேல் சீறி,ஓட்டப் பாலகரப்பார் இல்லை;
கன்றிறக்கும் நட்டத்தைக், கண்டறிந்த உண்மையரே

வல்லார். மற்றையோர் எங்ஙனம் உணர வல்லார் ஆவர்? அவன் திருவருளே துணையாக நின்று உணர்த்தினால் அல்லாமல் உணரக் கூடியவன் அல்லன். ஆதலால் அவனையே சரண் அடைந்து அவன் புகழை எடுத்தோத, அவனையே துணையாக நின்று கூறியருளுமாறு வேண்டுதல் வேண்டும். இறைவன் புகழோ விதந்தோதற் கரியது. அவன் ஆட்ட நாம் ஆடுகிறோம். அவன் உணர்த்த நாம் உணர்கின்றோம். நம் சிறுமையும் இறைவன் பெருமையும் நனகு விளங்க, 'வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே' என்று அன்பும், ஆர்வமும், அடிமையும் பணிவும் தோன்ற நெஞ்சம் நெக்குருகிக் குழைந்து உருகி வேண்டினால், 'தூமறை பாடு வாயார் சொற்றமிழ் பாடுக' என்று அருள் பாலிப்பார். 'அவனருளாலே அவனருள் வணங்கி, மெய்யன்போடு அவன் புகழினை அழகுறப் போற்றி யுய்தல் வேண்டும். இறைவன் சத்துப்பொருள், சித்துப் பொருள், ஆனந்தப் பொருள் ஆதலின், சச்சிதானந்தப் பொருள். சத்து - உள்பொருள், சித்து - அறிவுப் பொருள்: ஆனந்தம் - முழு இன்பப்பொருள்.

ஒளிவளர் விளக்கு, உலப்பிலா ஒன்று, உணர்வு கடந்த உணர்வுப்பொருள், பளிங்கின் திரணமணிக் குன்று என்று முன்பார்த்தோம் ஆதலின், இறைவன் சத்துப்பொருள் என்பது விளங்கும். சித்தத்துள் தித்திக்கும் தேன், அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனி. கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி என்ற வற்றால் நுகர்ந்து அனுபவிக்கும் சித்துப்பொருள் இறைவன் என்பது விளங்கும். அம்பலம் ஆடரங்காக வெளிவளர் தெய்வக் கூத்து உகந்தவனாகவும், உலகம் வாழக் கண்டு களிக்கும் பெற்றியால் ஆனந்தமுற்று நடம்புரிபவன் என்றும் அறிதலால் ஆனந்தப் பொருள் என்றும் அறியுமாறு கிடக்கின்றது.

---

உறவும் பொருளும் ஒதுக்கித் துறந்தோர்,
மறந்து மதிமயங்க மாட்டார்கள் நிச்சயமே.

எனவே இறைவன் சத்து, சித்து, ஆனந்தம் என்னும் முப பெரும் பொருளாய சசசிதானந்தன் என்பது நயம்பட உணரலாகும்.

இவ்வாறு நயம்படவும் தெளிவாகவும் அறிவிககின்றவர் யார் தெரியுமா? அவர்தான திருமாளிகைத் தேவர். இவர் திருவிசைபபா இயற்றிய ஒனபதின்மருள் ஒருவர். போகர் என்னும சிததருடைய மாணவர் திருமாளிகைத தேவர். இவர் திருவாவடுதுறையில் வாழ்ந்தவர். திருவாவடுதுறை மடத்துள் இவருககு ஒரு கோயில் அமைநதுள்ளது, இவர் திருவீழி மிழலைக் கோயிலில திருநந்தா விளக்கு ஒன்று அமைத்துள்ளார் என்று, அவ்வூாக கோயிற சாசனம் கூறுகினறது.

இங்குக் கூறபபெற்றவை யாவற்றையும் திரட்டிச சுருக்கி அழகுற வெண்ணெய் போல உருட்டித்தரும் பாடலின் செறிவும், வளமும், தெளிவும், நயமும், அழகும், இசையும் பொருந்தி விளங்க அளித்துள்ள வகையினை உணர்ந்து உய்வோமாக.

பண் - பஞ்சமம். திருவிசைப்பா.

திருசசிற்றம்பலம்.

'ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ கடநததோர் உணர்வே;
தெளிவளர் பளிஙகின திரள்மணிக் குனறே!
சிததத்துள தித்திக்கும் தேனே!
அளிவளர் உளளதது ஆனந்தக கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெயவக கூத்துகந் தாயைத்
தொண்டனேன விளம்புமா விளம்பே.''

திருச்சிற்றம்பலம்.

—திருமாளிகைத்தேவர்.

## தாம்தாம் செய்தவினை

[ரஸபதி]

பிள்ளை யில்லை. என்ன வாழ்வு இது? என்றான் அரிச்சந்திரன். பிராணபதீ! எழுதாக் குறைக்கு அழுதால் ஆகுமா? என்றாள் சந்திரமதி. தம்பதிகட்கு, வர வர இந்த ஏக்கம் வலுத்தது.

அரிச்சந்திரா! வருணனை வழிபடு! வழிவகை பிறக்கும் என்று, அருந்தவ வசிட்டர் ஆறுதல் கூறினர். ஆறுமாத காலம், அரிச்சந்திரன அப்படியே ஆராதித்தான்.

அதன் பயனாக, ஒருநாள், எதிர்நின்றான வருணன்

அரசே! உன கருத்தை உணர்ந்தேன. பிள்ளைவரம் தருவேன். எனக்குப் பிரீதி விளைய, பிறக்கும் பிள்ளையை வெட்டிப் பலியிட்டு வீரவேள்வி செய்வாயா? நீ வாக்கு அளித்தால், என்வாக்கை நான அளிக்கிறேன் என்றான். சுழன்றது, இப்படி தேவ சூழ்ச்சி, இப்படியும் ஒருவரம் இருக்குமா? அதிர்ந்தது மனம்.

பிறககவே இல்லை பிள்ளை என்ற குறை வேண்டாம். தேவ ப்ரீதி செய்தோம் என்ற திருப்தியேனும் இருககும். அப்படியே செயகிறேன என்று, குழப்ப நிலையில் மன்னன் வாக்குக் கொடுததான். பிறக்கும் பிளளை யெனறு, வாக்கு அளித்து மறைந்தான வருணன்.

சந்திரமதி கருபபம் எய்தினள். தாராபலம், கிரகபலம் தக்கபடி யிருந்தது. அநநேரத்தில், பிறந்தது ஒரு பிள்ளை. மகிழ்ந்தது மன்னன் மனம். நீராடினன. சாதகம் ஆதிய நடத்தினன். வாரித் தானங்களை வழங்கினன. இனபம் கொண்ட அதே நேரத்தில், எதிர்நின்றான் வருணன்.

---

காவலர்தம் நடபிருநதும், ஏவலர்முன கையேந்தல்,
ஆவின் கழுத்துதசை கன்றுசப்பல ஆம்நிலையே.

அரிச்சந்திரா! வரதானத்தால் புத்திர தாகம் தணிந்ததா? அன்று வாக்களித்தபடி, அரிய வேள்வியை இன்றே ஆரம்பி என்று அறிவித்தான்.

கொல்வதா? பிள்ளையையா? ஐயோ! என்ன வேதனை! அரிச்சந்திர இதயம், இப்படி அதிர்ந்து அழுதது.

வருண மூர்த்தி! பாலன் பிறந்த பத்துநாள் வரை, தந்தை வேள்வி செய்யத் தக்கவன் அல்லன். ஒரு மாதம் வரை, தூய்மை யடையாள் தாய். இருவரும் சேர்ந்து தானே வேள்வியை இயற்ற வேண்டும்!

உண்மைதான். பிறகு வருகிறேன் என்று, வருணன் மறைந்தான். அதன் பிறகுதான், மன்னனுக்கு நல்ல மூச்சு வந்தது. பிறந்த பதினோராம் நாளில், பிள்ளைக்கு லோகிதன் எனப் பெயரிட்டான். ஒருமாதம் இடையில் ஓடி ஒளிந்தது, வந்து நின்றான் வருணன். அதுகண்டு, நரபதி உடலும் நடுங்கியது.

ஸ்வாமி! பல்முளைக்காத பசு யாகத்திற்குப் பயன்படுமா? முளைத்தபின், உமது கருத்தை முடித்து வைக்கிறேனே! அப்படியா! சரி. பிறகு வருகிறேன என்று வருணன் மறைந்தான். பருவம் வந்தது. முப்பத்திரண்டு பற்களும் முளைத்தன. வருணனும், நகை முகமாக வந்தான். கண்டதும் கோபதி வயிறு குழம்பியது. கூப்பிய கைகளால் கும்பிட்டான். பெரும! சௌள கர்மம் நடக்க வில்லையே! யாகப் பசுவிற்குக் கருப்ப கேசம் இருப்பது கூடாதே!

அரிசசந்திரா! வரும்போ தெல்லாம், எனனை வஞ்சிப்பதுபோல் தோன்றுகிறதே! ஒவ்வொரு சமயமும் நீ உரைப்பது, உண்மை போலவே இருக்கிறது. இபபோது போகிறேன்; பிறகு வருகிறேன். அப்போது என்ன சொல்லப் போகிறாய் பார்க்கிறேன என்று, மடங்கி வருணன் மறைந்தான.

---

தீயர் இரக்கமிலர், தண்டித்தாலும் திருந்தார்;
ஆய முழம்குறைக்க, சாண்நீளும் அக்கதையே.

காலம் வந்தது. சௌளகர்மமும் நடந்தது. சந்திரமதி, தாயனுடன் வந்தாள். கணவன அருகில் அமர்ந்தாள். அதிர்ந்தது பூமி; எதிர்நின்ருன் வருணன. செய்! இப்போதே வேள்வியைச் செய்! என்று, ஆரவாரித்தது அவன் குரல். தடையில்லே. செய்கிறேன் எனறு, தழுதழுத்தது மன்னன் குரல்.

ஸ்வாமி! அந்தணர், அரசர், வைசியர் மூவரும் துவிஜர்கள்தான். சம்ஸ்காரம் பெறும்வரை, அவர்கள் நாலாம் வருணத்தர்தான். அந்த உபநயனம் லோகிதனுக்கு இன்னும் ஆகவில்லே. அதனுல், உமக்குப பிரீதி செய்ய இவன் உரியவனு? அரசர்க்குப் பதினெரு வயதில் உபநயனம். அவ்விதி நுட்பம் நீர் அறிந்தவர். பாதகம் இல்லே யென்ருல, சொல்லுங்கள! அவ் வேள்வியை இப்போதே ஆரம்பித்து விடுகிறேன். யோசித்தான் வருணன. உண்மைதான். பிறகு வருகிறேன் எனறு உருக்கரந்தான்.

ஐயோ! இவரிடம் நான் பிள்ளேவரம் வாங்கியதும் போதும். படுகிற பாடும் போதும். அன்று கொடுக்கும் தெய்வம்; இன்று கொலலும் தெய்வமாக வந்து குதிக்கிருரே; மூன்று கண்டம் எப்படியோ முடிந்தது. பிறகு பார்த்துக கொள்வம் என்று. ஆறி மனம் தேறினன அரிச்சந்திரன்.

பதினேராம் வயது பிறநதது. முதன்மை உபநயனம் முடிந்தது. வந்து நினருன வருணன்.

நமஸ்காரம். வரவேண்டும் ஸ்வாமி! மறந்து விடுகிறேன் அடியேன். மறக்கவில்லே தாங்கள். உபநயனம் முடிந்தபின, சமூவர்த்தனம் நடைபெற வேண்டும்; அது நிகழவில்லேயேல், உபநயனத்தால் பயன இலலே யலலவா!

அரிச்சந்திரா! மாதம் பல கடந்தால், மறந்து விடுவேன் என்று தான மதிக்கிருயா? தெரிகிறது உன் சூழ்ச்சி. இன்று போகிறேன். நாளே வருகிறேன என்று, உறுத்துக் கூறி

---

முழுநீளப் போலிநட்பை முன்ஒதுககி, சிற்றளவு
விழுத்தகுமெய்ந் நட்பே வேண்டுகின்ருர் மேலோரே.

வருணன் உருக்கரந்தான். லோகிதன், என்றும் குழந்தையா என்ன ? வருணன் வருகை, தந்தையின் தடுமாற்றம், இருவர் பேச்சுகள் ; இவைகளை ஊன்றி இன்று உணர்ந்தான். விவரத்தை அயலாரிடம் வினவி யறிந்தான். எனருயினும் இந்த இருவரும், தன் தலையைத் தள்ளுவர் என்று எண்ணியு அவன் நெஞ்சம் இடிந்தது. ஆடியது உடல். குழம்பியது குடல். எவரும் அறியாமல், நள்ளிரவில் உலர்ந்த நாவுடன், காடு நோக்கி ஓடினன். பயங்கரமான ஒரு புதரில் பதுங்கினன்.

பொழுது விடிந்தது. எங்கே லோகிதன் ? எங்கே ? எங்கே என்ற விசாரணை, எஙகும் எழுந்தது. அரிச்சந்திரன் அலறு கிருன். வயிற்றைப் பிசைகிருள் சநதிரமதி. ஏவலர்கள், நாடு முழுதும் தேடினர். காடு முழுதும் துழாவினர். அகப்பட்டால் தானே ! கலங்கித் தலை குனிந்தான் காவலன், அதே நேரத்தில், இடியொலி எழுப்பி எதிர் நின்ருன வருணன். கலகல என்று அரிசசந்திரன், கண் மழை சிந்தினன். ஸ்வாமி ! எனன சொலவது எனறு தோன்றவில்லையே ! தாஙகள் அடிக்கடி வந்து போவதை அறிந்த லோகிதன், போன இடம் புரியவிலலை. திடுதிடு என்று பலர் தேடு கின்றனர். அவன் அகபபடவிலலையே ! எனறு அலறினன்.

கோபத்தால் வருணன் குதிததான. அரிசசந்திரா ! என்னைப் பலதரம் ஏய்த்தாய ! திருப்பி உனமகன் உன்னை ஏமாற்றினன. என்னை அலைக்கழித்த தீவினையால, ஜலோதரம் உனனை நொறுக்கும் என்று, மாபெரும் சாபம் தநது மறைந் தான். வயிற்றில் நீரடைபபு, அப்போதே வாதிததது. புழுவாய்த் துடித்தான் பூபதி.

அரிசசந்திரா ! அரச குலத்தின மேம்பட்டவர் அந்தணர். அக்குலத்துப் பிள்ளை ஒனறை, விலை கொடுத்து வாஙகு. அச்

---

அடிப்பட்ட புண்ணில் மருந்துப் போடாமல்,
தடிமூக்கில் கட்டுகட்டும் தாந்தோன் றிகளுமுளர்.

சிறுவனை, வருணற்குப் பிரீதி செய்! சாபம் அதனுல் மாறும் என்ருர் வசிட்டர். வேறு வழி இலலாமல், அதற்கான ஏற்பாடுகளை அரச சபையே ஆரம்பித்தது.

நூறு பசு. ஆயிரம் ஏக்கர் நன்செய் நிலம். தங்கம், பிள்ளை எடைக்குத தரப்படும். ஒரு பிராமணப பிள்ளை தேவை. வருணற்குப பிரீதி செய்ய, மன்னரைப் காபபாற்ற அந்தண மையீர்! முந்துங்கள்! எனறு, முரசொலி எங்கும் முழங கியது. தான் வாழவேண்டும்: தன் குடும்பம் தழைக்க வேணடும், அதற்காக, பார்ப்பனப பிள்ளை ஒன்று பலியா வதா? என்று, பறையோசை கேட்ட எவரும் பதைத்தனர்.

• அஜிகர்த்தர் எனறு ஒரு அந்தணர். வாழ்நாள் முழுதும், வறுமை அவரை வதைத்தது. தாமும் தம்பத்தினியும், மூனறு சிறு தனயர்களுடன, அரைவயிறு கால்வயிறு என்று, ஏதோ கிடைத்தபோது உண்டு, பொழுதொடு ஒவ்வொரு நாளும் போராடிக் கொண்டிருப்பவர். விறுவிறுதத பறை ஒலி, அவர் செவியில விழுந்தது. ஆரம்பததில் மனம் அதிர்ந தது. அடுத்துத் தம்பதிகள் ஆலோசித்தனர். பாலர் மூவரில ஒருவன் பலியானுல், வறணட வாழககை வளம் பெறும்; இருக்கும் இரு பிள்ளைகளேனும், எதிர்காலததில் சுகம் பெறுவர். இபபடி எண்ணுதும் எணணினர். வறுமையை நினைந்து வருநதினர். மூவரில் நடுப்பிறந்த சுனச்சேபனை, விதியின்றி அரசற்கு விற்று விட்டனர்.

வேள்வி எழுநதது. பிள்ளையை, காவலாட்கள் யூப ஸ்தம் பத்தில் கட்டினர். பதைத்துத் துடிதத பாலனை, மொட்டை யடித்தனர். மஞ்சள் நீராட்டினர். நீறு பூசினர். திலதம் இட்டனர். குரூரமான இச்செயல் காண, குடிகள் அளவிலர் கூடியுள்ளர். வசிட்டர், சத்யகீர்த்தி முதலிஞேருடன அரிச சந்திரன், அளவிலாத உபாதையுடன பீடத்தில் அமர்ந்துளளன

முள்ளிச் செடியிலே, தேனவிழையும் மூடர்கள்போல்,
கள்ளமனை யில்லின்பம், காணலுறல் ஆவதுவோ?

விவரம் அறிந்த சிறுவன், ஐயோ அம்மா! அப்பா என்று அலறினன். சும்மா இரு அப்பா! சும்மா இரு என்றார் தந்தையார்.

காப்பாற்றுங்கள் மகராஜா! காப்பாற்றுங்கள் என்று சிறுவன் கதறினன். தரணிபன், தன் நோய் போக வேறு வழியில்லையே என்று தலை குனிந்திருந்தான. குடிகள் மனம் குமுறினர், வேள்விப பசுவை வீழ்த்தும் சாமித்திரனும் பாலன் கதறும் பரிபவம் கண்டு, இவனை நான் வெட்ட மாட்டேன் எனறு விலகினன். அரசே! கவலை வேண்டா. தீரா என் வறுமை தீர்த்தீர்! தங்கள் நோய் தீர, வேள்விப் பசுவான இவனை, நானே வெட்டுகிறேன் என்று முன் வநதான தந்தை. அடபாவீ! பிள்ளையை வெட்டத் துணிந்த நீ ஒரு மனிதனு என்று, முனகி எவர் வாயும், மெல்ல மொழிந் வியது. திடீரென்று, அங்கு விஸ்வாமித்திரர் வந்தார். அவ ரைக் கண்டதும், சபை முழுதும் கைகுவித்தது. இருந்த மன்னனும் எழுநது வணங்கினன். அவரைக் கண்டு அனை வரும் தொழுததை அறிநத சிறுவன், தாத்தா! ஐயோ தாத்தா! என்று அலறினன். அவன் குமுறல், விஸ்வா மித்திரர்க்கு அதிக அதிர்ச்சி யளித்தது; விசாரித்தார். விவரம் அறிநதார். அவர் மனம் வேதனை யடைந்தது.

அரிசசந்திரா! இச்சிறுவனை அவிழ்த்து விடு! உன் நோய் தீர, அரிய வேறு ஒரு வழியை ஆலோசிப்பம்; மறுபபாயேல், கொலைப் பாவம் கொக்கரிக்கும் என்று கூவினுர். தாக்கும் நோயால தவிக்கும் தரணிபன, ஒன்றும் தோன்ருமல் வாளா இருநதான. காஜிததார் கோசிகர். சிறுவா! அஞ்சாதே! இதை ஜபம் செய்! உய்தி உணடாகும் என்று, அவன் செவியில் வருண மந்திரத்தை ஓதினுர். உய்ய வழி என்றதை

---

சீரழிக்கும் சிற்றினபம்; சிந்தை பெருந்துயராம்;
பேரின்பம் எண்ணித் துறந்தார் பெரியவரே.

உணர்ந்து, மானசிகமாக, சிறுவன் அதை மளமள என்று உருவேற்றினன்.

வெட்டப்படும் நேரம் வந்தது. பளபளக்கும் வாளை நோக்கி,* சிறுவன பதைத்தான். கொந்தளித்தது சபை. நில் ! என்று ஒரு அதட்டல். எவர் மனமும் அதிர்ந்தது. கம்பீர தோற்றத்தில் வருணன காட்சி யாயினன். முதலில் கதறும் சிறுவனைக் கட்டவிழ்த்துவிட்டு, ஏளன நகையுடன், அரிச்சந்திரனை ஏறிட்டு நோக்கினன். வஞ்சிக்க முயன்று, வாக்குத் தவறினை ! அரிச்சந்திரா ! அந்தப் பாவம், சங்கிலித் தொடர்போல், தொடர்ந்து கொடுத்த தொல்லையைப் பார் ! பார் ! ஹஹ்ஹாஹாஹா ! என்னளவில் திருப்தி யடைகிறேன். மாபெரும் உன நோயும் மாயட்டும் என்று கூறி, வருணன் மறைந்தான். அவ்வளவில, அரிச்சந்திரன நோயும் அகனறது. எளவிழ இடமின்றி நிசப்தமாயிருநத சபை, இச்சம்பவம் கண்டு இன்பம் கொண்டது.

எங்கே என் தநதை ? எனறான் சிறுவன். கண்ணீருடன் புலர். அவன தந்தையைக் காட்டினர். பொருளாசை கொண்ட இவரா என் பிதா ? சீசீ என்று சிறுவன் சிரித்தான்.

சுனசசேபா ! உயிர்ப் பிட்சை தநத விஸ்வாமித்திரர்தான், உன் உண்மைத் தந்தை எனறார் வசிட்டர். பையன, அப்பா என்று, பரிவுடன் அவர் கரத்தைப் பற்றினன. அழைததுச் சென்ற அவர், தன் ஆஸ்ரமத்தில் வைத்து, அவனை அருங்கலை விஞ்ஞன ஆககினர்.

புதரில் மறைந்திருந்த லோகிதன், விளைந்த செய்தியை அறிந்து வெளிப்பட்டான். மகனைக் கண்ட தந்தையும் தாயும் மகிழ்ந்தனர்.

நாள் பல இடையில நடந்தன. தொடர்ந்த பல தொல்லைகள் தொலைந்தன. அந்த மகிழ்ச்சியில் அரிச்சநதிரன,

---

முள்ளை முளளால் எடுகக முனனுநர்போல், ஞானிகள்தாம் கள்ளப புலனழிய, இல்லறததைக் காணபாரே.

ஒரு ராஜசூய வேள்வி நடத்தினன். நடத்தி வைத்த வசிட்டர்க்கு, அளவிலாத சனமானங்களை அளித்தான். அந்த கோலத்துடன் வசிட்டர், இந்திர சபைக்குச் சென்றார். என்ன இது ? அலங்காரம் பிரமாதமா இருக்கிறதே என்றான் இந்திரன். ஆம். என் மாணவன் அரிசசநதிரன். அவன் சூர்யகுல திலகன. பரதார சகோதரன்; தரும மூர்த்தி; வாய்மை வள்ளல் என்று வாயாரப் புகழ்ந்தார் வசிட்டர். வருணப் பிரீதியான வேள்வியி லிருந்து அவன்பால் வெறுப்படைந்திருந்த விஸ்வாமித்திரர், எழுந்தார். பொய்யில் புழுங்கினன். வஞ்சகம் வளர்த்தான. சுயநலவாதி அவன் என்று எதிர்வசை தொடுத்தார். வாதம் எழுந்தது; மோதலில் முடிந்தது. இகழும் புகழும் இருவரும், அரிச்சந்திர யோக்ய தாம்சத்தைப் புலனாக்க வேண்டும்; அதற்குமுன், வீண் சண்டை வேண்டா எனறான இந்திரன். அதன்பின் கோசிகர் சூழ்ச்சி, புயலா யெழுந்து பொங்கியது.

அரிச்சந்திரன், ஒருநாள் சத்ய கீர்த்தியிடம், விடியற்காலத்திற் தான கண்ட பயங்கர கனவை விவரித்தான். கனவு நூல் நுட்பம் உணர்ந்த அமைச்சன், அது கேட்டுக் கண்ணீர் சிந்தினன். அரசே! இக் கனவின்படி நாடுபோம், நகர் போம். அரசிளங் குமரனுடன் அரசியார் அடிமைப படுவர். தாழ்ந்த ஒருவனமுன் நீரும் தலை குனிவீர் என்றான். அஞ்சினன் அரிச்சந்திரன். சந்திரமதி எழுந்தாள். வலம் வநது கணவனை வணஙகினாள்.

பிராணபதீ! வருணனிடம் வாக்குத் தவறினோம். கால தத்துவ பயஙகரததை, கனவு முன்கூட்டிக் காட்டியது. "எனையிழந்தாலும் மனனு! என வயிற்று உதித்த மைந்தன் தனையிழந்தாலும், இந்தத் தலம் இழந்தாலும், வெம்போர் முனை யிழந்தாலும்," வாயமை முறைமட்டும் வழுவாது

---

இளமை என்னார், மூப்பென்னார், என்றுமே தன்ம
வளமான நீதியை, வளர்ப்பார்கள் சானரோரே,

இருப்பம் ; எது வரினும், சதி செய்யும் விதி என்று சகிப்பம் என்றாள் சந்திரமதி. சத்யம் பிறழாதபடி, காவலனை சாதிரமதி காத்தாள் எனும் புகழ், தேவீ! என்றும் உனக்கு இருக்கும் என்றான அரிசசந்திரன். உவகையுடன் வாய்மை காப்பன எனறு, உலோகிதனும் உடன்பட்டான். அதன்பின் செய்தி என்ன ?

கனவில் கண்டபடி நாடிழந்தனர். நகர் இழந்தனர். மனைவியும் மகனும் அடிமை யாயினர். லோகிதன் பாம்பு கடிப்பட்டு இறந்தான. சந்திரமதி கொலைகாரி எனச் சிறைபபட்டாள். காசி யரசன் தீர்பபின்படி, அரிசசாதிரனே அவளை வெட்ட வாளை எடுத்தான. எதிர்நின்ற விஸ்வாமிததிரர் சிரித்தார். அரசை அளிப்பதாக உமக்கு வாக்கு அளிககவில்லை என்று, ஒரு வாரத்தை சொல்! இபபோதே உன் பழைய ஆந்தஸ்தை அளிககிறேன என்றார்.

முனிவர் பெருமா! பதியிழந்தேன். பாலனை இழந்தேன். படைத்த நிதியிழந்தேன். இனி உளது என நினைக்கும் கதியிழக்கினும், " கட்டுரை யிழக்கிலேன் " என்றான் காவலன.

புனித மலர்மழை பொழிந்தது. வானவர் முனிவர் பிரசன்னம் ஆயினர். வாழ்க உஙகள் வாய்மை என்று வாழ்த்தினர்.

வந்த யாவரையும் தம்பதிகள், வணங்கினர். உவந்து முன் வந்தார் உருத்திரர்.

ஸ்வாமி! வருணனிடம் வாக்குத் தவறினேன ; கண்ட பயன் கடுகதுனபம். விஸ்வாமிததிரரிடம், வாய்மை தவற மாட்டேன் என்று விரதம் பூணடேன் ; அதனாலும் அடைந்த அவதிக்கு அளவே இல்லை எனறு, கண் மழை பொழிந்து அரிச்சநதிரன் கதறினன.

---

வாழ்வில் துயரம் வருமெனினும், பின்வாங்கார்;
தாழார் முயற்சியினில், நல்லதுணர் தக்கோரே.

அரிச்சந்திரா! நீலலோகிதன் எனபான், நீதி தவருத ஒரு மன்னன். மூவுலகாள வேண்டும் என று, அவனுக்குப் பெருகிய ஆசை பிறந்தது.

தாவும் ஏழு பிறப்புவரை, தவம்செய்ய வேண்டும்; இன்றேல், ஒரு பிறப்பில், பல பாழும் துன்பம் படவேண்டும். இரண்டில் ஒன்றை ஏற்றவர், மூவுலகு ஆள்வர் என்ருர் முனிவர்கள். அங்ஙனமேல, ஏழுபிறப்பு வேண்டா. அள விலாத துனபங்களை அனுபவிக்கும் ஒரு பிறபபே வேண்டும் என் று எண ணினன்; எண்ணியபடியே ஒருநாள் இறந்தான்.

அரிசசந்திரா! முன் பிறப்பில் நீதான் அந்த நீல லோகிதன். எண்ணிலா வேதனேகள், உன எண்ணப் படியே உருவானவை. வருணன வசிட்டர் விஸ்வாமித்திரர்கள், அவ்வகையில் உன்னைப் புடம்போட்டு எடுதத புண்ணியர்கள்.

அப்படியா செய்தி! என்று அரிசசந்திரன அலறினன்.

சநதிரமதீ! நீ மனனன ஜோதிமான மகள். பிறநத நேரம் பிழை என் று, பெட்டியில வைத்து, உன் தந்தை உன்னை ஓடும் ஆற்றில உருட்டினன். ககன சிற்பியான மயன, அப்பெட்டியைக் கண்டான். திறந்தான். குழந்தையைக் கண்டு குதூகலித்தான.

மகளே! நீ தேவி பக்தனுன மதிதயன மகளாய்ப பிறப்பை; பிறக்கும் போதே, கம்பீர தாலி உன கழுததில் இருக்கும். எவரும் காணு அதைக் காண்பவனே உன கணவன். இந்தப் பிரசித்தியை, அடுதத பிறப்பில அடைவை என்று ஆசி கூறினன. அவன் அன்று அறிவித்தபடியே, இப் பிறப்பில் இன்பம் கண்டனை. சந்திர மண்டல மத்யகா என்ற இறைவியை வழிபட்ட மதிதயன, இனிய அப் பெயரையே உனக்கு இட்டான. அநத அருமையை உணர்ந்து, தேவியை

---

பிறர்க்கென று தோண்டுகுழி, தானவீழும் பேதை;
திறமாம் தருமத்தில், நல்லோர் திகழ்வாரே.

ஆராதிக்க மறந்தாய்; ராஜ்ய போகத்திலே மிதந்தாய். அந்தப் பாவம், இப்படி உன்னை அலைக்கழித்தது.

லோகிதா! தட்சகன் இந்திர சபைக்குச் சென்றான். அவன் மகன், அரண்மனை வாயிலில் இருந்தான். இடை வந்த நளகூபரன, விளையாட்டாக அம்மகனை வெட்டி வீழ்த்தினான். விவரம் அறிந்த தட்சகன், அடபாபீ! என் மகனைக் கொன்ற நீ, அடுத்த பிறப்பில் அளவிலாத் துன்பம் அனுபவிப்பை இறுதியில பாம்பு கடியுணடு இறப்பை என்று சபித்தான் லோகிதா! நீதான் அந்த நளகூபரன! போதுமா வரலாறு. ஊன்றி நோக்கினால், எவர்மேலும் பிழை இல்லை. தாம் தாம் செய்த வினையை, எவரும் தாமே அனுபவிக்க வேண்டும்!

அரிசசந்திரா! முற்பிறபபில் செய்த முடிபின்படி, அள விலாத துனபததை இப்பிறப்பில அனுபவித்தனை! இனி நீயே மூவுலக அதிபதி என்றார் உருத்திரர்.

அலறினன அரிச்சந்திரன், பிரபோ! முன எண்ணி யிருக்கலாம். பிறந்தோா உறுவது பெருகிய துன்பம்; அகிலமும் ஆண்டவர்கள், ஒரு நாளும் அமைதி பெற்றது இல்லை: வேண்டேன உலக வாழ்வு என்று வெறுத்து மறுத்தான்.

மகேஸ்வரீ! புவநேஸ்வரீ! பரமேஸ்வரீ! ஐங்கோணத்து அமர்பவளே! அம்பிகே! அகில லோக அம்பா! சதாட்சீ என்று, இரவும் பகலும் மூவரும் தேவியை ஏத்திப் போற்றி இருந் தனர். பல காலம் இப்படியே பஜித்தனர். அதன பயனாக, ஒருநாள் எம்பெருமாட்டி எதிர் நினறாள். அத்தேவியின் அருள நிழலில் புகுநத அரிச்சந்திர தம்பதிகள், மகனுடன இறவாப் பிறவா இனபம் எய்தினர். அவர்களைப பின்பற்றிய அகில வுலகமும், அம்பிகை வழிபாட்டின ஆநந்தம் அனுபவித்தது.

வாழ்க தேவிதாசர்கள்.

---

நல்லசெய்! தீமைவிடு! என்றே நலஞ்சிறந்தோர்
சொல்லும் புனிதமொழி ஓர்வார்கள் தூயவரே.

# இறைபணி புரிதல், அறநெறி நிற்றல்

(ஆ. கி. ரங்கராஜன்)

மானிடருக்கு ஏன் தீமைகள் ஏற்படுகின்றன? பிறவிகளில் முதன்மையானது மானிடப் பிறவி தானே! எவற்றையும் கற்றறியவும், ஊகித்துணரவும் ஏற்ற அறிவு இதற்குத் தானே ஏற்பட்டிருக்கிறது! அவ்வாறிருக்க மனிதர் பல துன்பங்களுக் குள்ளாவதேன்?

காரணம், அந்த உயரிய அறிவினை தக்கவாறு நல் வழியில் பயன்படுத்திக் கொள்ளாத தவறி விடுதலேயாம். அவ்வாறு தவறிவிடுவதால் மானிடனது பிறவிகள் எண்ணற்றனவாக வளருகின்றன. மானிடன் செய்யும் தவறினாலேயே அவனது அறிவு வலிமையிழந்து விடுகிறது. "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?" என்று, மாந்தருக்கென இறைவனிடம் முறையிடுகின்றார் தாயுமானார். பல்வேறு வகைப்பட்ட பிறவிகளில் செல்ல நேருவதும் மனிதனின் தவறுதான் காரணமாகிறது.

அசம்பாவிதமாக இடையூறுகளில் அகப்பட்டுக் கொள்ளுவதற்கும் அந்தத் தவறுதான் அடிப்படையாக நிற்கிறது. அத்தகைய தவறுதான் என்ன? நாம் அறிய வேண்டாமா?

இறைபணி புரிதல், அறநெறி நிற்றல் ஆகியவற்றை நழுவ விட்டுத் தன் மனம் சென்ற திசையில் செல்லுதலும், அகந்தை முதலாகிய தீய குணங்களை அடைந்து தனது கடமைகளைச் செய்யாது விடுதலுமே மனிதனின் தவறுகளாகும்: இத்தகையோன எத்தகைய பேராற்றல் கொண்டிருந்த போதிலும் வீணாகுமே யன்றி, அவனைத் தக்க சமயத்தில் பாதுகாக்கப் பயன்பட மாட்டாது அதே சமயத்தில் அவன் கொண்டிருக்கும் தீய குணங்கள், அவனைக் காட்டிக் கொடுத்து இன்னலில் ஆழ்த்துகின்றன.

இறைபணி புரிதல் என்பது மனிதனின் அத்யாவசியமானதோர் கடமையாகும். இறைபணி என்றால் என்ன? ஏன் அதைச் செய்யவேண்டும்? செய்ய முடியாவிட்டால் என்ன செய்வது? இறைபணி என்றால் இறைவனை வழிபடுதல் என்று பொருள். எவற்றையும் ஆக்கி அளித்துக் காப்பவன் இறைவன். எவ்வுயிர்க்கும் தந்தையாக விளங்கு

பவன் இறைவன். ஆதலின், மனிதன் இறைவனை வழி படக் கடமைப் பட்டவன் ஆகின்றான். அது தவிர்க்க முடியாததாகும். மேலும், எவ்வுயிர்களினும் மேம்பட்ட உயிராகி, பிற உயிர்கட்கு இல்லாத உன்னத அறிவைப் பெற்று விளங்கும் மனிதன், நிச்சயமாக இறைவனை வழிபட்டே யாக வேண்டும். அவ்வாறு வழிபடுவதனால், மனிதன், தன்னைத் துன்புறுத்தும் வினைப்பகுதியினின்று, இறைவனால் காப்பாற்றப்படுகின்றான். அதனால் பிறவிகள் அவனைவிட்டு நீங்குகின்றன.

இறைவன் அளித்துள்ள ஆற்றலினால் மனிதன், கற்க வேண்டிய அனைத்தையும் கற்கின்றான். எதிரிலா வன்மை பெறுகின்றான். சகல சுகங்களையும் எய்தத் தக்க நிலையை அடைகின்றான். இவ்வாறு அடையும் மனிதன், தன்னைப் படைத்த இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டாமா? தெரிவிக்காவிடில், அவன் கற்றதனால் எய்தும் பலன்தான் என்ன? மனிதனுக்கென, அகில உலகில், எத்தனை எத்தனையோ வசதிகளையும், சாதனங்களையும் படைத்தனன் இறைவன். அவற்றினைப் பயன் படுத்தும் வழி முறைகளையும், அதனை அடுத்து செயல் புரியத்தக்க உயர்ந்த பகுத்தறிவையும், மனிதன் பால், கருணை பூண்டு அளித்திருக்கின்றான்.

மலைகளின் சிகரத்தை எட்டிப் பிடிக்கின்றான் மனிதன். கடலின் ஆழத்தைக் கணக்கிடுகின்றான் மனிதன். 'அகில உலகில் தனக்கு நிகர் எதுவுமே இல்லை; யாவும் தனக்குக் கட்டுப்பட்டவையே என்னுமாறு, அனைத்தையுமே தனக்குப் பயன்படுத்திக் கொண்டு வாழ்கின்றான் மனிதன். இவ்வளவும் மனிதன் தன் பகுத்தறிவினாலும், கற்றறிந்ததனாலுமே எய்தியுள்ளனனெனில், இத்தகைய அறிவினையும், ஆற்றலையும் மனிதனுக்கு வழங்கியுள்ள இறைவனின் அறிவாற்றல் எத்தகையது! எல்லையற்ற அறிவாளனாய் இறைவன் விளங்குதலால், இறைவனை 'வாலறிவன்' எனத் தமிழ்ப் பெரும் புலவர் கூறிப் போந்தார். ஆதலினால்தான் மேற்கண்ட விவரங்களை எல்லாம் கருதிப் பார்த்து,

கற்றதனால் ஆய பயனென்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

என மனிதனைக் கேட்டு அறிவுறுத்துகின்றார்:

இறைவனுக்கு மனிதன் நன்றி செலுத்த அவசியம் இருப்பினும் அதனை இறைவன் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில் மனிதனால் ஆகவேண்டிய காரியங்கள் எதுவும் இல்லை. எனினும், மனிதன் நன்றி செலுத்துங்கால் அதிக மகிழ்வடைகின்றான். பெருங்கொடை வள்ளல் ஒருவனுக்கு, ஒரு ஏழையினால் ஆக வேண்டிய காரியம் எதுவுமில்லை யெனினும், தனனால் நன்மை யடைந்த அந்த ஏழை, தனக்கு நன்றி செலுத்துங்கால், மட்டற்ற மகிழ்ச்சி எய்துகின்றனன் அந்த வள்ளல்!

ஆனால், மானிடருள் வள்ளலா யிருந்தாலும், வறிய வனாய் இருந்தாலும் ஒருவரின் ஒத்தாசை, மற்றவருக்கு எவ்விதத்திலாவது தேவைப படவே செய்கிறது. இறைவனோ எனில், அவ்வாறல்லன. எங்கும் நிறைகின்ற பொருளாகி, ஆனந்த வடிவுமாகி, ஒளி மயமாகி, மறைகளின் முதலும் நடுவும் முடிவுமாகி, முடிவிலா ஆற்ற லுடையோனாகி, பிறத்தல், இறத்தல் என்ற கால வரம்பில்லாதவனாகி, எவற் றிற்கும் முதற் பொருளாகி, எப்பொருட்கும், எவ்வுயிர்க்கும் கர்த்தனாகி விளங்குகின்றான். இத்தகையோனுக்கு மானிட னால் ஆக வேண்டிய காரியம் என்ன உளது? மானிடன் நற்கதி யடையவே இறைவனைச் சரணடைந்து வழிபடுதல் அவசியமாகிறது. ஸ்ரீ அபிராமி பட்டரும் இறைவனைத் தாய் மையாகக் கண்டு துதிக்கும்போது, இந்த உண்மையைத் தான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
அன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி! அருமறைக்கு
முன்னாய், நடுவெங்குமாய், முடிவாய முதல்விதன்னை
உன்னா தொழியினும், உன்னினும் வேண்டுவ தொன்றில்லையே!

— ஸ்ரீ அபிராமி அந்தாதி 55-ம் பாடல்.

இவ்வாறு மானிடன் இறைபணி செய்யினும், அவ்ன் அறநெறி நிற்றல் மிக மிக அவசியமானதாகும். இறை வனைப் பணியாமலும் சிலகால இருந்துவிடலாம்; அறநெறி யினின்று மானிடன் தவறுவானாயின், இறைவனுடைய கொடும் சினத்திற்கு ஆளாகின்றான். அதன் விளைவாகவே, மானிடன், அதிபயங்கரத் துன்பங்களுக் குள்ளாக நேருகிறது மானிடன் அதனை உணர்ந்து திருந்துவானாக!

# SRI RAMAYANA & SRI SKANDAPURANA

"ஆடு மாடு தேடினும்
ஆனை சேனை தேடினும்
கோடி வாசி தேடினும்
குறுக்கே வநது நிற்குமோ
ஓடியிடட பிசசையும
உகநது செயத தர்மமும்
சாடியிட்ட குதிரை போல
தர்மம் வந்து காககுமே"

The atmosphere of the capital city of the state has been surcharged with the spirit of Sri Ramayana, expounded by Sri Anantharama Dikshitar and Sri Narayana Dikshitar, for the last over forty days. Early in the progress of the lectures, the exponents who are brothers and who may now be described as the modern Lava and Kucha of the present day, brought up before the great assembly they were addressing, a picturesque presentation of Sri Skanda of the holy pool of Saravana — a kindred incarnation of the Supreme. The great Valmiki would appear to have forgotten for a moment that he was forging the beauties of the epic theme of Ramayana, when he epitomised the greatness of Sri Gangeya and the Ganges. Both Rama and Skanda constitute the integrated grace of the Trinity and it is but fitting that the great Valmiki, in framing his great epic, has portrayed the greatness of Skanda in the beginning of his epic. The most enjoyable portions of Ramayana have

been incorporated in the immortal verses of Sri Arunagiri in his divine Tiruppugazh songs on Muruga which may be said to be Encyclopedic in their presentation of the highest and most enjoyable spiritual experiences of almost every purana. The universality of divine experience and spiritual brotherhood, and the easy availability of the Divine Grace for men in all grades of human society are beautifully depicted in both, and a very welcome stress has been laid by the expounders on the need to know "*Dharmā*" and to live it to make human life worth having. The Bhakti side of "Dharma" has been continuously expounded by the brother pandits, and the public have unerringly indicated their gratitude and appreciation of the exposition by the brother artists.

Dharma is basic of the Hiudu philosophy of life and its fruition. The tumultuous appreciation of the public and its impressive expression have raised Sri Anantharama Dikshitar to one of the highest altitudes ever attained by any puranika. May the Lord bless man kind with the elevation, spirituality and universalism for which Sri Anantharama Dikshitar and his family have dedicated themselves.

*Thiruppugazh Mani.*

பேசா அனுபூ தியை அடியேன்
பெற்றுப் பிழைக்கப், பேரருளால்
தேசோ மயம்தந்(து), இனிஒருகால்
சித்தத்(து) இருளும் தீர்ப்பாயோ ?
பாசா டவியைக் கடந்த அன்பர்
பற்றும் அகண்டப் பரப்பான
ஈசா! பொதுவில் நடமாடும்
இறைவா! குறையா இன்னமுதே !

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Regd. No. M. 5590 Amirthavachani ஜூலை, (1961-அமிர்தவசனி 13-7.


# Coffee

**Ours for Quality**

RAW ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS) LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

**சுவர்ண மாளிகை**

**A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.**

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 113




**குடை மார்க் பினாயில்**

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளர்:

**ஸ்பிரிட் வேர் ஹவுஸ்**

49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 33982

விநியோகஸ்தர்கள்:

**கார் & கம்பெனி**

1/6, செகின் லேன் பீச்,
சென்னை-1. டெலிபோன்: 22058


**அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள் :**

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைந்தபடியால், தயை கூர்ந்து பிலவ வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.**

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 54, Bunder Street, Madras-1.